www.tamilarangam.net

# செம்பதாகை

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் தத்துவார்த்த ஏடு

இதழ் 9

ஏப்ரல் 2011

## அடையாள அரசியலின் அரசியல்

— சி. சிவசேகரம்

## சர்வதேசச் சமூகமும் வரலாறும் விடுதலையும்: சில குறிப்புக்கள்

— அஸ்வத்தாமா

## நவகொலனியத்தின் கீழ்த் தேசியம்: தேசங்களின் உருவாக்கம்

— இமயவரம்பன்

## கவிதைகள்:

கத்தார், ஹபிப் ஜலிப், வரவர ராவ்

www.tamilarangam.net

**ஆசிரியர் தலையங்கம்**

# ஆணை கிடைத்ததாம். அடுத்து என்ன?

அண்மையில் நடந்து முடிந்த ஊள்ளூராட்சித் தேர்தல்களில் வடக்குக் கிழக்கின் மக்களின் ஆணையைப் பெற்றுவிட்டதாகத் தமிழ்த் தேசியக் கூட்மைப்பு உரிமை கொண்டாடுகிறது. அது வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு 1977இல் கிடைத்த ஆணையினும் வலியது என்றும் கூட்மைப்புப் பிரமுகர்கள் சிலர் பெருமை பேசுகின்றனர்.

அந்தக் கணக்குக்களில் எமக்கு ஐயமிருந்தாலும், “எங்களை நம்புங்கள் உங்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைப்போம்” என்ற உறுதிமொழியுடன் வாக்குக்களைக் கேட்டவர்கள் தங்களுக்குக் கிடைத்துவிட்டதாகக் கூறும் ஆணையைக் கொண்டு என்ன செய்யப் போகிறார்கள் என்று அறியும் உரிமை எமக்கு உண்டல்லவா!

இவ்வாறான ஆணைகள் தமிழ்த் தலைவர்கட்கு இதற்கு முன்பும் கிடைத்துள்ளன. 1956 முதல், தமிழர் பெருமளவிலும் முஸ்லிம்கள் குறிப்பிடத்தக்க அளவிலும் மொழிப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கும் சமஷ்டி ஆட்சியைப் பெற்றுத் தருவதற்கும் தமிழரசுக் கட்சிக்குத் திரும்பத் திரும்ப ஆணை வழங்கினர். 1977இல் தமிழீழத்தைப் பெற்றுத்தருவதற்குத் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டணி ஒரு ஆணையைப் பெற்றது. இப்போது இன்னொரு ஆணையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கூட்டாளிகளும் பெற்றுள்ளனர்.

முன்னர் தமிழ் மக்களின் ஆணையை வேண்டியபோது, எப்படி உரிமைகளை வெல்லுவார்கள் என்பதற்குக் ‘காந்தி வழி’ என்ற மாதிரி ஒரு மறுமொழி இருக்கும். பிறகு, 1977இல் எப்படித் தமிழீழம் பெறப் போகிறார்கள் என்ற கேள்வி முற்றாக அமுக்கப்பட்டுவிட்டது. எப்படியோ பெற்றுத் தருவார்கள் என்று மக்கள் வாக்களித்தனர். அந்த நம்பிக்கை பொய்த்தபின் தொடங்கிய ஒரு ஆயுதப் போராட்டம், பெருந் துன்பக் கதையாய் முடிந்தது. போரின் போது விடுதலைப் புலிகளே ஏகப் பிரதிநிதிகள் என்று சொன்ன பழைய அரசியற் பரம்பரை, விடுதலைப் புலிகள் தோற்ற பிறகு, தாங்கள் என்றுமே தமிழீழம் கேட்கவில்லை என்றும் என்றுமே போரை ஏற்கவில்லை என்றும் சொன்னர்கள். அதன் பின்பு, தங்களைத் தெரிவு செய்யும்படி மக்களிடம் மன்றாடியும், அடுத்தடுத்த தேர்தல்களின் போது தமிழ் மக்கள் தமது அவநம்பிக்கையைப் புலப்படுத்தினார்கள்.

இம்முறை, சர்வதேசச் சமூகம் பார்த்துக்கொண்டிருப்பதாகவுந் தமிழரின் ஒற்றுமையை உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்றும்

தமிழ் மக்களிடம் கூறப்பட்டது. மக்கள் நம்பினார்களோ இல்லையோ, வேறு தெரிவின்மையால் வாக்களித்துள்ளனர்.

முன்னைய ஆணை எதற்கும் இல்லாதபடி இந்த ஆணைக்குள்ள சிறப்பு ஏதெனின், எதைப் பெற்றுத் தருவதற்காக இந்த ஆணை என்று கேட்கப்படாமலே ஆணை தரப்பட்டுள்ளது என்பது தான்.

“தமிழ் மக்களுக்கான தீர்வை அரசாங்கம் தட்டிக்கழிக்க முடியாது” என்று, தன் கடந்தகாலத்தை மறந்து, வீர வசனம் பேசுகிற த.தே.கூ. தலைவர் இரா. சம்பந்தன், தான் எதிர்பார்க்கிற தீர்வு எத்தகையது என்று இன்னுஞ் சொல்லவில்லை. அவரது கதைகட்கு முக்கியத்துவம் வழங்கும் நாளேடுகளும் அதைப் பற்றி அவரிடம் விசாரிக்கவில்லை.

அரசாங்கம் த.தே.கூ. தலைவர்களுடன் பேசுகிறதா அண்டை நாடென்றுடன் பேரம் பேசுகிறதா என்று நமக்குத் தெரியாது. ஆயினும் நடப்பதை அறியும் உரிமை அனைத்து மக்களுக்குமுண்டு.

எது பேசப்பட்டாலும், குடாநாட்டுக்கு வெளியே தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாய் இருந்துவந்த பகுதிகளில் அவர்களைச் சிறுபான்மையினராக்கும் செயல்கள் தொடர்கின்றன. தமிழரைத் திட்டமிட்ட முறையில் வெளியேற்றப் பாதை வகுப்பட்டு வருகிறது. தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதேசத்தைப் பறிக்க இரண்டு கருவிகள் பயன்படுகின்றன. ஒன்று சிங்களக் குடியேற்றம். மற்றது, அதிலுங் கேடாக, அந்நியக் கம்பனிகளுக்குக் காணிகளை வழங்கல். இதில் இரண்டாவதைப் பற்றித் தமிழ்த் தலைவர்கள் பேச மறுப்பதேன்?

மீள்குடியேற்றம் என்பது, குறிப்பாக வன்னியில், இடம்பெயர்ந்த மக்களை மேலும் பெரும் அவலத்துக்குள்ளே தள்ளிவிட்டுள்ளது.

வடபுல மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சனை இன்னமும் தீர்க்கப் படாமல் உள்ளது. அவர்களது வயிற்றுப் பிழைப்பில் மண்ணள்ளிப் போடும் இந்திய இழுவைப்படகுகளின் ஊடுருவல் தொடர்கிறது.

இவை போகச், சாதாரண மக்கள் அன்றாடம் முகங் கொடுக்கும் பேரினவாத ஒடுக்கலையும் பிற வாழ்வாதாரப் பிரச்சனைகளையும் பற்றி இதுவரை வாய்திறக்காதவர்கள் அரசாங்கத்துடன் பேசிப் பெறும் எந்தத் தீர்வும் நடைமுறைப்படுத்தப் படும் என அவர்களால் எப்படி உறுதி கூற இயலும்?

எனவே, ஆணையை வழங்கிய மக்கள், இனியும் ஏமாறாதிருக்கத், தாங்கள் வழங்கிய ஆணை சரியாக நிறைவேற்றப்படுகிறதா என்று தட்டிக் கேட்கும் கடமையையும் உடையவர்களாகின்றனர்.

*****

www.tamilarangam.net

# அடையாள அரசியலின் அரசியல்

## சி. சிவசேகரம்

*[பிரான்ஸிலிருந்து வெளிவரும் “அசை” சஞ்சிகையிலிருந்து இக் கட்டுரை நன்றியுடனும் சிறு திருத்தங்களுடனும் மீள வெளியிடப் படுகிறது. இங்கு, ‘அடையாள அரசியல்’ என்ற பதம், பின்நவீனத்துவ நோக்கிலன்றிச், சமூக அடையாளஞ் சார்ந்து முன்னெடுக்கப்படும் அரசியலைக் குறிக்கிறது. அவ் அடையாள அரசியலை மாக்சியர்கள் எவ்வாறு கருதல் தகும் என்பதையும் கட்டுரை விசாரிக்கிறது.]*

### *1. அரசியலில் அடையாளம்*

அரசியல் எப்போதும் அடையாளஞ் சார்ந்தது தான். அரசியற் களத்தில் உள்ள அடையாளம் ஒவ்வொன்றும், நேரடியாகவோ மறைமுகமாகவோ வேறுபடும் அளவுகளில் அரசியலிற் பங்காற்றுகிறது. சமூக ஏற்றத் தாழ்வுகளும் சுரண்டலும் ஒடுக்குமுறையும் எந்தெந்த அடையாளங்களின் பேரில் நிகழுகின்றனவோ அந்தந்த அடையாளங்களின் பேரில் மோதலும் பகைமையான அரசியலும் இருப்பது இயல்பானது. எனினும் சில அடையாளங்களும் அவை சார்ந்த முரண்பாடுகளும் அரசியலில் ஆதிக்கஞ் செலுத்துகின்றன.

எல்லா வகையான அடையாளங்களும் அடையாளப்படுத்தல்களும் குறிப்பிட்ட கால, இடச் சூழல்களிலேயே முக்கியம் பெறுகின்றன. அதை விட, அடையாளப்படுத்தல்களின் தோற்றமும் விருத்தியும், அடையாளங்களைச் சார்ந்த சமூக நலன்களாலேயே முடிவாகின்றன. சமூக அடையாளங்களில் நிரந்தரமானதும் நீக்க இயலாததும் அடிப்படையானதுமான அடையாளம் பால் வேறுபாடு சார்ந்தது. பால் அடையாளஞ் சார்ந்த சில விளிம்பு நிலை அடையாளங்கள், சமூக நிலை சார்ந்து வேறுபடும் அளவுகளில் முக்கித்துவம் பெற்றாலும், ஆண்-பெண் என்ற வேறுபாடே சமூக இருப்பிற்கு அடிப்படையானது என நாம் அறிவோம். அறியப்பட்ட வரலாற்றிற் பெண்கள் மீதான ஒடுக்குமுறையும் சுரண்டலும் நீண்டகாலமாக இருந்து வந்துள்ளன. மார்க்சியத்தின் எழுச்சியின் பின்பே, அம் முரண்பாட்டின் வரலாற்றுத் தோற்றுவாய் சரிவர அடையாளங் காணப்பட்டது. அதன் பின்பே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பெண்ணுரிமைக்கான குரல்கள் பல்வேறு தளங்களில் எழுந்தன. எனினும், கடந்த அரை நூற்றாண்டில், அதன் முக்கியப்படுத்தலில், சமூக நீதியைத் தவிர்ந்த நோக்கங்களும் குறுக்கிட்டுள்ளன. இவ் விடயம் ஆழச் சிந்தித்துப் பேசப்பட வேண்டியதாயினும், இக் கட்டுரையில் அதை விரிவுபடுத்த இயலாதுள்ளது.

சமூகத்தின் இருப்பு அதன் உற்பத்தியைச் சார்ந்தே இருக்கிறது. உற்பத்தி முறைகளும் உற்பத்தி உறவுகளுமே ஒரு சமூகத்தின் தன்மையைத் தீர்மானிக்கும் அடிப்படைகள். அதற்கும் மேலாக, உற்பத்தி முறைகளதும் உறவுகளதும் வரலாற்று விருத்தியின் போக்கிற் சமூக அமைப்பில் அவை ஏற்படுத்திய மாற்றங்களின பாதிப்பு, உற்பத்தி முறைகளும் உறவுகளும் மாறியதன் பின்பும், நெடுங்காலத்திற்குத் தொடருகின்றது. இவை யாவும் மனித இனத்தின் அடையாளங்களைப் பல பரிமாணங் கொண்டனவாகவும் அவற்றின் சிக்கலான கூட்டுத் தொகுதிகளாகவும் மாற்றுகின்றன.

மிகவும் எளிதாகவே நாம் அடையாளங் காணக் கூடிய இனம், மொழி, பிரதேசம், மதம், பண்பாடு என்பனவற்றுடன் இந்தியத் துணைக்கண்டத்தின் சாதியையும் எடுத்துக் கொண்டால், இவற்றில் எதுவுமே நிலையானதோ நிரந்தரமானதோ இல்லை எனக் காண்போம். சில அடையாளங்கள் இணைந்து ஒரு பொது அடையாளமாகின்றன. சில பிரிந்து தனித்தனி அடையாளங்களாகின்றன. சிலவற்றைப், பிற அடையாளங்களோ புதிய அடையாளங்களோ மேவி விடுகின்றன. எனினும், தொடர்ச்சியாக மாறி வருகிற மொழி, மதம், பண்பாடு போன்ற அடையாளங்களினூடு ஒரு வரலாற்று இழையையோ ஒரு பொதுச் சிந்தனை அடிப்படையையோ அல்லது கற்பனையான ஒரு பண்பையோ வைத்து அவற்றில் ஒவ்வொன்றுக்கும் ஒரு நீண்ட வரலாற்றையும் மாறா இயல்பையும் நிரந்தரத் தன்மையும் வழங்குகிற போக்கையும் நாம் காண்கிறோம்.

மேற்கூறிய போக்கின் ஒரு பகுதி ஒரு சமூகத்தினதோ சமூகக் குழுமத்தினதோ இருப்புப் பற்றியது. ஒரு சமூகமோ அதன் ஒரு பகுதியோ தன்னை எவ்வாறு அடையாளப்படுத்துகின்றது என்பது அதன் இருப்புச் சார்ந்த முக்கியமான ஒரு கேள்வியாகிறது. அதன் இருப்பு மிரட்டலுக்குள்ளாகும் போது அடையாளப்படுத்தல் மேலும் முக்கியமாகிறது. அவ்வாறே, ஒரு சமூகத்தில் உள்ள ஒரு ஆதிக்கப் பிரிவு, தனது நலன்களைப் பேணவும் அச் சமூகத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டவும், அச் சமூகத்தின் அடையாளப்படுத்தலை ஒரு கருவியாக்குகிறது. சமூகங்களின் உள்ளும் சமூகங்கட்கிடையிலும் அடையாளஞ் சார்ந்த முரண்பாடுகள் கூராகி மோதல்களாவதும் போர்களாவதும் பெரும்பாலும் முற்கூறிய அடையாளப்படுத்தல்களின் தேவையும் நோக்கமும் சார்ந்தே எனலாம்.

நிதானமாகச் சிந்தித்தால், மேலாதிக்கமும் சுரண்டலும் அடக்கு முறையும் ஒடுக்கலும் இல்லாத போது, சமூகங்களிடையிலான உறவுகளிற் பகைமைக்குத் தேவையில்லை என விளங்கும். பொதுவாகச், சமூகங்களிடையிலான உறவுகளிற் கடும் பகைமை இருப்பதில்லை. வரலாற்றில் இருந்துவந்த பகைமைகள் மறக்கப்பட்டும் உள்ளன. மாறாகக், கடந்த காலத்திலிருந்து வரலாற்றுப் பகைமையை உயிர்ப்பித்தும் புனைந்தும் உருவாக்குவதையும் நாம் காண முடியும். இதற்கான சமகாலச் சான்றுகளாக, இந்தியாவின் இந்துத்துவத்தையும் இலங்கையின் சிங்கள பௌத்தத்தையும் கூறலாம்.

இவ்வாறான அடையாளப்படுத்தல்கள் யாருடைய நலன் சார்ந்தவை என்ற கேள்வி இங்கு எழுகிறது. ஒவ்வொரு அடையாளப்படுத்தலும் ஒட்டுமொத்தமாக ஒரு சமூகத்தைக் குறிப்பதாகவே முன்வைக்கப் படுகிறது. ஆனால், அது அச் சமூகத்தின் பொதுவான நலனைக் குறிப்பதில்லை. மாறாக, ஒரு சிறிய பிரிவினரது நலன்களையே அது முதன்மைப் படுத்துகிறது. எஞ்சியோரிற் கணிசமான பகுதியினர் அது தமது நலன் சார்ந்தது என்று எண்ணும் விதமாகச் சில நலன்கள் காட்சிப் படுத்தப்படுகின்றன. பெரும்பாலானவர்கட்கு அது தமது இருப்பிற்கும் பாதுகாப்பிற்கும் தேவையானது என்ற விதமான மயக்கம் ஊட்டப்படுகிறது. சில வேளைகளில், அவர்களது சமூகம் பற்றிய உயர்வான எண்ணங்கள் புனையப்பட்டு, அந்த மேம்பாட்டைத் தொடர்ந்து பேணுகிற தேவை வலியுறுத்தப்படுகிறது.

மேற்கூறியதை எளிதில் விளங்கிக் கொள்ள, முதலில் நிறவாதத்தை எடுத்துக் கொள்ளலாம். வட அமெரிக்காவில் அடிமை வியாபாரத்தில் தனது வேர்களைக் கொண்டிருந்த நிறவாதம், (இன்றைய ஐக்கிய அமெரிக்க அரசுகள் எனப்படும் அமெரிக்காவில்) ஒரு கறுப்புப் சனாதிபதி ஆட்சிக்கு வந்த பின்பும் குறிப்பிடத்தக்க வலிமையுடன் உள்ளது. தென்னாபிரிக்காவில், நிறவாத அடிப்படையில் அப்பட்டமான கொடுமையை நியதியாக்கிய ஒரு ஆட்சிமுறை, ஒரு விடுதலைப் போராட்டத்தின் விளைவாக முடிவுக்கு வந்தது. ஆயினும் நிறவாதம் தொடர்கிறது. இவ்வாறான சிந்தனைகள், வெவ்வேறு சூழல்களில் வெவ்வேறு வடிவங்களை எடுக்கின்றன. ஜேர்மன் ஃபாசிசம் யூதர்களை மட்டுமே இலக்கு வைக்கவில்லை என்பதும் நிறவாதம் அதன் சித்தாந்த அடிப்படை என்பதும், நாம் மறக்கக் கூடாத உண்மைகள்.

கொலனியத்தின் விருத்தியில் நிறவாதம் முக்கிய பங்களித்தது. காலப் போக்கில் கொலனியம் நவ கொலனியமாக மாறிய பின்பும், தேசிய நலன் என்ற பேரில் நிறவாதம் செயற்பட்டு வந்துள்ளது.

இனம், தேசம் என்ற பலவாறான அடிப்படைகளில் அமைந்த அடையாள அரசியற் செயற்பாடுகளின் மூலம் வட, தென் அமெரிக்கக்

www.tamilarangam.net

கண்டங்களில் முழுச் சமூகங்கள் இல்லாதொழிக்கப்பட்டுள்ளன. பிறவற்றின் பண்பாட்டு அடையாளங்கள் சிதைக்கப்பட்டுப் பொருளாதார அடிப்படை தகர்க்கப்பட்டுச் சமூகங்கள் சீரழிக்கப்பட்டுள்ளன. அவுஸ்திரேலியாவில் நடந்தவை அதினுங் கொடியவை. ஆபிரிக்காவின் தென் பகுதியிற் சமூகங்கள் அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டன.

ஆசிய வரலாறும், இவ் விடயத்திற், பெருமைக்கு உரியதல்ல. வரலாற்றுப் பெருமை கோரும் ஒவ்வொரு பேரரசின் எழுச்சியின் போதும் பழங்குடிகளும் சிறுபான்மைச் சமூகங்களும் பலவாறான அழிவுகளைச் சந்தித்துள்ளன. அப் போக்கு முதலாளிய வளர்ச்சியுடன் மேலுந் தீவிரமாகி எதிர்ப்புக்களையும் போராட்டங்களையும் சந்தித்த கதைகளை நாம் சிறிதேனும் அறிவோம்.

இவ்வாறு, அடையாளங்களைச் சமூக மோதலுக்கு உள்ளாக்குகிற அரசியல் யாருடைய நலன் சார்ந்தது என்பதை, வர்க்கமும் வர்க்கப் போராட்டமும் பற்றி அறிந்தவர்கள் எளிதாக அடையாளங் காண்பர். எனினும், அதை மீள நினைவூட்டுவதிற் கேடில்லை. ஒரு சமூகத்தில் ஆதிக்கத்திலிருக்கிற ஒரு சமூகப் பிரிவு, தனது நலன்களை முழுச் சமுதாயத்தினது அல்லது (பொதுவாக ஒரு பெரும்பான்மையைக் கொண்ட) அதன் ஒரு பகுதிக்குரிய நலன்களாகக் காட்டி, அந்த நலன்களை முன்னெடுப்பதன் பேரிற், பிற சமூகங்கள் மீதான ஒடுக்கு முறையையும் ஆக்கிரமிப்பையும் நியாயப்படுத்துகிறது. இத்தகைய போக்கு வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு வடிவங்களில் இருந்தாலும் பொதுவான ஒரு பண்பை நாம் அடையாளங் காணலாம்.

ஒரு சமூகத்தின் உற்பத்தி முறையையும் உற்பத்தி உறவுகளையும் (அதாவது அதனுடைய இருப்பை முடிவு செய்கிற விடயங்களைச்) சார்ந்த முரண்பாடுகளின் முக்கியத்துவம் இரண்டாம் பட்சமானதாகவும் சில சமயங்களிற் பேசக் கூடாததாகவும் மாற்றப்படுகிறது. வர்க்கமும் வர்க்கப் போராட்டமும் இப்படிப் பின்தள்ளப்படுவது தற்செயலானதல்ல.

## *2. அடையாளமும் ஆதிக்க அரசியலும்*

கொலனிய யுகத்தில், ஒரு சமூகத்தின் மீது ஆதிக்கஞ் செலுத்துகிற, அச் சமூகத்திற்குப் புறம்பான, ஒரு சக்தியோ மேலாதிக்கக் கும்பலோ தன்னை ஒரு நேரடியான ஆதிக்கச் சக்தியாகக் காட்டிக் கொண்டது. இன்று அந்த நிலை இல்ல. நவகொலனியம் தன்னை நேரடியாக அடையாளங் காட்டுவதில்லை. தன்னை ஆதிக்க, சுரண்டல் சக்தியாகக் காட்டுவதை இயலுமானவரை தவிர்க்கிறது. அது போன்று, ஒரு சமுதாயத்தின் ஆதிக்க வர்க்கமோ வர்க்கங்களோ தம்மை அவ்வாறு அடையாளங் காட்டுவதைத் தவிர்க்கின்றன.

www.tamilarangam.net

ஒடுக்குமுறையாளர்களும் சுரண்டற்காரர்களும் தங்களால் ஒடுக்கப் படுகிற பெரும்பான்மைக்கு எதிராகத் தம்மை நேரடியாக நிறுத்திக் கொள்வதில்லை. கொலனிய யுகத்தில், நேரடியான மோதலைத் தவிர்க்க உள்ளூர் ஆதிக்கச் சக்திகளுடனான கூட்டணிக்கும் மேலாக, ஒரு நடுத்தர வர்க்கம் உருவாக்கப்பட்டது. அச் சமூகப் பிரிவு ஒடுக்கப்பட்ட பெரும்பான்மையினின்று தன்னை வேறுபடுத்திக் கொள்ளுமாறு கொலனிய நிருவாகம் கவனித்துக் கொண்டது. வேறு சூழ்நிலைகளில் நாட்டின் ஒரு தேசிய இனப் பிரிவிற்கு அல்லது அதினின்று பிரித்தெடுக்கப்பட்ட ஒரு பகுதிக்குச் சலுகைகள் வழங்கி ஒரு நடுத்தர வர்க்கம் உருவாக்கப்பட்டுள்ளது. ஏலவே அந்த நாட்டில் இருந்து வந்த ஏற்றத்தாழ்வுகள் இங்கு பயன்படுகின்றன. கிழக்கு ஆபிரிக்காவிற் போன்று, இன்னொரு நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட ஒரு சமூகமும் இத்தகைய நடுத்தர வர்க்கமாக அமைந்துள்ளது.

எவ்வாறாயினும் சுரண்டி ஒடுக்கிற சிறுபான்மை தன்னைத் தற்காத்துக் கொள்ளப் படைவலிமையையும் அடக்குமுறையையும் பயன்படுத்தலாம். அது இயலாது போகிற போது, அடையாள அரசியல் மூலம் அது தன்னைப் பலப்படுத்த முயலுகிறது. தான் சார்ந்த ஒரு பெரும்பான்மைச் சமூகத்தின் அடையாளத்துக்குள் அது தனது சுரண்டும் வர்க்க அடையாளத்தைத் மறைக்கிறது. அத்துடன் அந்த வர்க்க அடையாள மறைப்பு வெளிப்படாமல், சமூகத்தில் உள்ள சிறுபான்மை அடையாளங்களில் ஒன்றையோ பலவற்றையோ பெரும் பான்மைக்கு எதிரான மிரட்டலாகவும் நெடுங்காலப் பகையாகவுங் காட்டுகிறது. இவ்வாறு பிரதான முரண்பாடாக அமையக்கூடிய வர்க்க முரண்பாட்டிலிருந்து கவனத்தைத் திசைதிருப்ப அதற்து இயலுமாகிறது.

அதே வேளை, தன்னோடு அடையாளப்படுத்த இயலாத சமூகப் பிரிவினரைப் பிளவுபடுத்துகிற போக்கையும் நாம் காண முடியும். இதற்கு வசதியாக நீண்ட வரலாற்றையுடைய இன, மத, மொழி வேறுபாடுகள் போன்றவை அமைகின்றன. இத்தகைய அடையாள வேறுபாடுகள் உற்பத்தி உறவுகள் சார்ந்த ஏற்றத் தாழ்வுகளாகவும் சொத்துடமையும் பொருள்வளமும் சார்ந்த வேறுபாடுகளாகவும் அமைகிற போது, அவை எளிதாகவே அச் சமூகப் பிரிவினருடைய ஒற்றுமைக்குத் தடையாகின்றன.

இந்தியப் பார்ப்பனியம் மேற்கூறியவாறான ஒரு அணுகுமுறையைக் கையாண்டுள்ள விதத்தைக் கவனித்தல், ஆளும் அதிகார வர்க்கம் பயன்படுத்தம் ஐக்கிய முன்னணித் தந்திரோபாயம் சிறிது விளங்கும். தொடக்கத்தில், இந்து என்கிற அடையாளத்தின் மூலம் பார்ப்பன மேட்டுக்குடிகளின் தலைமையின் கீழும் பின்பு கூட்டாளிகளாகவும் உயர் சாதியினர் சேர்க்கப்பட்டனர். பின்பு, தாழ்த்தப்பட்ட சாதியினர் முஸ்லிம்களுடன் கூட்டணி அமைக்காதவாறு பல்வேறு தளங்களில்

www.tamilarangam.net

(தமது சாதி அடையாளத்தை இழக்காமலும் அதன் தாழ்நிலையைக் கண்டுணராத விதமாகவும்) அவர்களும் இந்து அடையாளத்திற்கு உட்படுத்தப் பட்டனர். முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் எதிரிகளாக்கி இலக்கு வைப்பதற்கு இந்த உட்படுத்தல் அரசியல் பயன்பட்டது. குஜராத் கலவரத்தின் போது பழங்குடியினர் கூட இந்த மதவெறி இந்துத்துவ அடையாளத்திற்குள் இணைக்கப்பட்டனர்.

இப்போது தலித்துக்கள் எனப்படுவோரை இந்து அடையாளத்திற்குட் கொண்டுவரும் ஊக்கமான முயற்சி, சாதியத்தையும் தீண்டாமை யையும் ஒழிக்கும் நோக்கம் இல்லாமலே மேற்கொள்ளப் படுகிறது.

இலங்கையில் சிங்களப் பேரினவாதம் தொடக்கத்திலிருந்தே சிங்கள பௌத்தத்தைத் தனது அடிப்படையாக்கிக் கொண்டது. தமது சுய முன்னேற்றத்திற்காகப் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ அடையாளத்தை ஏற்ற மேட்டுக்குடிகள், அரசியல் லாபத்திற்காகப் புத்த மதத்திற்கு மீளத் தயங்கவில்லை. சிங்கள பௌத்த அடையாளத்தை விடச் சாதி அடையாளம் முக்கியமாயிருந்த ஒரு காலமும் இருந்தது. மேட்டுக்குடி அரசியலில், சர்வசன வாக்குரிமை இல்லாத சூழலில், ஆதிக்க வர்க்கங்களிடையே சாதி வேறுபாடு முக்கியமானதாக இருந்தது. ஆனால் நிலவுடைமை சார்ந்த கொவிகம சாதியின் சமூக ஆதிக்கம் குறையத் தொடங்கிய சூழலில், நிலவுடைமை- முதலாளிய வர்க்கப் பிரிவினரிடையே சமரசம் ஏற்படுகிறது. மத அடையாளம் குறுகிய காலத்திற்கு அடக்கி வாசிக்கப்பட்டு மொழி அடையாளம் முதன்மைப் படுத்தப்பட்டாலும், இப்போது சிங்கள பௌத்த ஆதிக்கப் போக்கு வலுவாக உள்ளது. எனினும் தமிழ், முஸ்லீம், கிறிஸ்தவப் பெருமுதலாளிகட்கும் சிங்கள பௌத்தப் பெருமுதலாளிகட்கும் உள்ள உறவு சுமுகமாகவே உள்ளது.

அடையாள அரசியல் என்பது, ஒரு சமுதாயத்தின் விருத்திப் போக்கில் அதனுள் அமைகின்ற பல்வேறு அடையாளங்களை வலியுறுத்தி முதன்மைப் படுத்துவதையும் இன்னொருபுறம், காலத்துக் காலம், பொது அடையாளங்களைத் தேடுவதையும் பற்றியதாகும்.

பௌத்த அடையாளத்தை வற்புறுத்துவதில் கருத்து வேறுபாடு களுடன், சிங்களத் தேசிய இன அடையாளம் வலுப்பட்ட சூழலில், தமிழ் இன அடையாளம் அதன் தலைமையில் இருந்த ஆதிக்கச் சக்திகளான யாழ்ப்பாணச் சைவ வேளாளச் சாதியைச் சார்ந்த ஒரு மேட்டுக்குடிச் சிறுபான்மையின் நலன்களையொட்டி உருவானது. அந்த நலனை வலியுறுத்துவதற்குத் தமிழ்ச் சமூகத்திலிருந்து சவால் எழாத நிலையில், அச் சிறுபான்மை, தமிழ் அடையாளம் ஒன்றை வலியுறுத்துவதையும் வளர்த்தெடுப்பதையும் விடுத்து, யாழ்ப்பாணச் சைவ வேளாள ஆதிக்கத்தையே முன்னிறுத்தி வந்தது. 1948ம் ஆண்டு

தமிழரசுக் கட்சி தோன்றிய போது தான் தமிழ்ப் பேசும் இனம் என்ற அடையாளம் முன்வைக்கப்பட்டது. ஆனால் அதற்குரிய சமூகச் சிந்தனையோ அரசியல்—சமூக அடிப்படையிலான வரலாற்று வழிப்பட்ட விருத்தியோ இல்லாததால், அது தமிழ்ப் பேசும் மக்களை ஒற்றுமைப் படுத்தத் தவறியதுடன் வீண் பகைமைகட்கும் வழி வகுத்தது. ஒரு அதிகார வர்க்கத்தின் குறுகியகால நலன்களே சமூக அடையாளப் படுத்தலை வழிநடத்தின என்பதை இங்கு நாம் கவனிக்க வேணடும். நீண்டகாலமாகத் தமிழ் மேட்டுக்குடிகள் தமிழரை ஒரு ஒடுக்கப்பட்ட சிறுபான்மையாகக் காணத் தவறியமை இவ்விடத்து முக்கியமான ஒரு விடயமாகும். சிங்கள மக்களிடையே அரசியலில் சாதிய பிரதேச வேறுபாடுகள் உள்ளன. எனினும் அரசியலில் அவற்றின் ஆதிக்கம் குறைவாக இருந்தமைக்குத், தமிழரிடையே இருந்தது போல எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்திய தனியொரு மேட்டுக்குடிப் பிரிவு இல்லாமை ஒரு முக்கியமான காரணமாகும்.

ஆளும் வர்க்கம் வெறுமனே இன, மத அடிப்படையிலான பெரும் பான்மை அடையாளம் ஒன்றை நிறுவுவதில் மட்டும் தங்கியிருக்க இயலாது. நாடு அல்லது தேசம் என்ற அடையாளமும் பயன்படுகிறது. நாட்டுக்கு எதிரான ஒரு பொது அந்நிய எதிரி இருப்பது வசதியானது. சீன, பாக்கிஸ்தான் மிரட்டல்கள் மட்டுமன்றி, நேபாளம், பங்ளாதேஷ், இலங்கை உட்பட அண்டை நாடுகளையும் இந்தியப் பாதுகாப்பிற்கு மிரட்டலாகக் காட்டலாம். இவை எவ்வாறு வர்க்க நலன்களைப் பேண உதவுகின்றன என அறிய வேண்டின், தீவிர தமிழ் இன உணர்வு தட்டியெழுப்பப்படும் தமிழ் நாட்டில், ஒரு காலத்தில் வட இந்தியரைப் பகைவராகவே கண்ட இம் மாநிலத்தில், இப்போது சீன, பாக்கிஸ்தான் விரோத இந்திய தேசப்பற்று ஒரு புறமும் மலையாளிகட்கும் தெலுங்கர்கட்கும் கன்னடியர்கட்கும் எதிரான உணர்வுகள் மறுபுறமும் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன. இவை எந்த வர்க்க நலன்களைச் சார்ந்த முன்னெடுப்புக்கள் என்பது கவனிக்கத் தக்கது. இவற்றின் நோக்கம் வர்க்கச் சுரண்டலிலிருந்து கவனத்தைத் திசைதிருப்புவதே என்பதை எளிதாக அடையாளங் காணலாம். ஏனெனில் அவற்றை ஊக்குவிப்போர் அமெரிக்காவுடனான நட்பை வரவேற்கின்றவர்களாவர்.

### *3. அடையாளமும் விடுதலை அரசியலும்*

ஆளும் அதிகார வர்க்கம் தனது நலன்களைக் காப்பாற்றவும் தனது சுரண்டும் வர்க்க, ஒடுக்குமுறை அடையாளங்களை மறைக்கவும் தனக்கு வசதியான ஒரு இன, மத, மொழி அடையாளத்தையோ அடையாளங்களின் சேர்க்கையையோ பயன்படுத்தும் போது, ஆளப்

www.tamilarangam.net

படுகிற வர்க்கங்கள் அதை எதிர் கொள்ளுவது எவ்வாறு என்ற கேள்வி எழுகிறது.

எந்தெந்த அடிப்படைகளிற் சுரண்டலும் ஒடுக்குமுறையும் நடக்கின்றனவோ அவை சார்ந்து சுரண்டி ஒடுக்கப்படுவோரிடையே ஒற்றுமையை ஏற்படுத்த இயலும். ஆனால் அது எப்போதும் இயலுவ தில்லை. எளிதாக நிகழுவதுமில்லை. ஒடுக்குமுறையாளர்கள் ஒடுக்கப் பட்ட மக்களிடையே உள்ள முரண்பாடுகளைப் பயன்படுத்துகிறார்கள். மேலும் பிளவுகளை ஏற்படுத்தும் விதமாக அடையாள வேறுபாடுகளை வலியுறுத்தவும் புதிய வேறுபாடுகளைப் புகுத்தவும் அவர்கட்கு இயலுகிறது. எனவே, ஒடுக்கப்பட்ட சமூகங்கள் ஒடுக்கிற சமூகம் பயன் படுத்தும் அடையாள அரசியலை எதிர்கொள்ளக்கூடிய அடையாள அரசியல் தந்திரோபாயமொன்றைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

கொலனியத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் அந்நிய ஆக்கிரமிப்புக் கும் எதிரான போராட்டங்களில், முக்கியமாக இடதுசாரிச் சிந்தனை வழிகாட்டிய சூழல்களில், ஐக்கிய முன்னணித் தந்திரம் வேறுபட்ட அடையாளங்களை ஒரு பொது எதிரி என்கிற அடையாளத்திற்கு எதிராக முன்னிறுத்தியே வெற்றி பெற்றுள்ளது.

அடையாளங்களிடையிலான முரண்பாடுகளில் நட்பானவை எவை பகைமையானவை எவை என்பதை விளங்கிக்கொள்ளும் போதே எதிரியைத் தனிமைப்படுத்துவதும் ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்று படுத்துவதும் இயலுமாகிறது. எனவே, இந்த மாற்று அடையாள அரசியல், ஒரே நேரத்தில், வேறுபட்ட அடையாளங்களை அங்கீகரிப்பதாயும் அவற்றிடையே பொதுவான பண்புகளை வலியுறுத்துவதாயும் அமைய வேண்டியுள்ளது.

குறுகிய நோக்குடைய அடையாளப்படுத்தல்கள் தோல்விக்கும் அழிவுக்கும் இட்டுச் சென்றுள்ளமைக்குச் சமகால அரசியலில் நம்மை அண்டிய சூழல்களில் இரண்டு உதாரணங்களை நோக்கலாம். ஒன்று ஈழத்தின் தமிழ்த் தேசியவாத அரசியல். அது, முதலில் தமிழர் என்ற தெளிவீனமான அடையாளத்துடன் யாழ்ப்பாணக் குடாநாட்டு மேட்டுக் குடி நலன்களை முன்வைத்தது. பின்பு தமிழ்ப்பேசும் மக்கள் என்ற அடையாளத்தை முன்வைத்தது. பின்பு தமிழீழம், தமிழ்த் தேசம் என்கிற அடையாளங்கள் முனைப்புப் பெற்றன. ஆயினும், எந்த நிலையிலும் அதன் செயற்பாடு வட, கீழ் மாகாணத் தமிழர் என்ற எல்லையைத் தாண்டியதில்லை. அதே வேளை, முஸ்லிம்களதும் மலையகத் தமிழரதும் தனித்துவத்தையோ தேசிய இனங்களாக அவற்றின் விருத்தியையோ அது ஏற்கவில்லை. இன்று பிரதேச வாதத்திற்கு முகங் கொடுக்க இயலாமல் அது திணறுகிறது. ஒரு பொதுவான அடிப்படையைக் கட்டியெழுப்பச் சமூக அடையாளங்களை

www.tamilarangam.net

மூடி மறைப்பதும் அக முரண்பாடுகளை மறுப்பதும் தேவையற்றது. அது மட்டுமல்லாது, அது கேடானதாகவும் அமையலாம். என்பதற்குத் தமிழ்த் தேசியவாதத்தின் இன்றைய அவலம் ஒரு நல்ல உதாரணம்.

இரண்டாவதாக, தலித்தியம் என்ற பேரில் முன்னெடுக்கப்பட்ட அரசியல், சாதி அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்று திரட்டத் தவறிவிட்டது. அது மட்டுமல்லாது, தலித்தியம், ஒடுக்கப்பட்ட மக்களின் நடுவே சாதி அடிப்படையிலான தனித்தனிக் கட்சிகளை உருவாக்க உதவியதேயொழியச் சாதி ஒடுக்குமுறைக்கெதிரான பொதுவான போராட்ட அணியை உருவாக்கத் தவறிவிட்டது. அத்துடன், இன்றைய தலித்திய அரசியல், தலித்துக்களினிடையிலிருந்து உருவான புதிய மேட்டுக்குடிகளின் வர்க்க நலன்களைப் பேணத், தலித்துக்களை வாக்கு வங்கிகளாகப் பயன்படுத்துகிற ஒரு போக்கையும் கொண்டுள்ளது. பாராளுமன்றத் தேர்தல் அரசியல், இந்துத்துவ மேட்டுக்குடிகளுடான வர்க்க சமரசத்திற்கும் வழி செய்துள்ளதைக் கடந்த பத்தாண்டுகளிற் காண முடிந்தது. தொடரான பல போராட்டங்களின் மூலம் தலித்துக்களின் சமூக உணர்வு நிலை வளர்ந்திருந்தாலும் சாதிய வர்க்கக் சுரண்டற் சமூக அமைப்பைத் தகர்க்கிற நோக்கில் அதை நெறிப்படுத்த இயலாத விதமாகவே தலித்தியச் சிந்தனை பயன்பட்டுள்ளது.

இங்கெல்லாம் பொதுமைப்பட்ட ஒரு அடையாளம் தன் பொதுமையைப் பேணத் தடையாயிருப்பது என்ன என்ற கேள்வி எழுகிறது. வர்க்க அடையாளம் திட்டமிட்டே புறக்கணிக்கப் பட்டு வந்ததை நாம் கவனித்தல் அதற்கான விடை கிடைக்கும். வர்க்க அடையாளம் புறக்கணிக்கப் பட்டதுடனன்றி, அதை முன்னெடுப்பது தலித் அடையாளத்தை மறுத்துத் தலித் ஒற்றுமையைக் குலைக்கும் என்று பின்னவீனத்துவத்தின் துணையோடு தமிழகத் தலித்தியவாதிகள் வற்புறுத்தியதையும் நாம் அறிவோம்.

தமிழ்த் தேசிய அரசியலாயினும் தலித்திய அரசியலாயினும் தனது அடையாளப்படுத்தலுக்குப் புறம்பான அடையாளங்களையும் பொதுமைப்பட்ட அடையாளப்படுத்தல்களையும் மறுத்ததன் மூலம், தன்னைப் பலவீனப்படுத்தியதே ஒழியப் பலப்படுத்தவில்லை.

மறுபுறம், வரட்டுத்தனமான முறையில் வர்க்க அடையாளத்தை முதன்மைப்படுத்திப் பிற அடையாங்களின் முக்கியத்துவத்தை மறுக்கிற போக்கு உள்ளது. சந்தர்ப்பவாத இடதுசாரிகளை இங்கு நான் கருதவில்லை. மாக்சியத் தூய்மை என்ற ஒன்றின் பேரில் வர்க்க முரண்பாடு தவிர்ந்த பிறவற்றின் முக்கியத்துவத்தை ஏற்க மறுக்கிற போக்குக்களையே இங்கு கருத்திற் கொள்கிறேன். மேற்கூறியவாறான போக்கின் மூலம் தொழிலாளி வர்க்கத்தைக்கூட ஒற்றுமைப்படுத்த

இயலாது. எனவே சுரண்டப்படுகிற வர்க்கங்களைத் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் அணி திரட்டுவது என்பது வெறுங் கனவாகவே அமையும்.

வர்க்க சமுதாயத்தில் வர்க்க அடையாளம் அடிப்படையானது. சமுதாய விருத்திப் போக்கில் வர்க்கங்களின் தன்மையும் அமைப்பும் மாறி வந்தாலும், உழைப்போருக்கும் உழைப்பை உறுஞ்சுவோருக்கும் இடையிலான பிளவு மேலும் ஆழப்பட்டுள்ளதே ஒழிய இல்லாமற் போகவில்லை. எனவே அந்த முரண்பாட்டைப் புறக்கணித்து எவ்விதமான சமூக அநீதியையும் போரிட்டு வெல்ல இயலாது.

குறிப்பிட்ட சூழல்களில், இனம், மொழி, மதம் போன்ற முரண்பாடுகள் மேலோங்கலாம். சாதி, பிரதேசம் போன்ற அடிப்படைகளிலான முரண்பாடுகள் அவசரமான நடவடிக்கைகளை வேண்டலாம். பால் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகட்கு எதிரான செயற்பாடு முக்கியமானதாகலாம். இவற்றுள் எந்தவொரு முரண்பாடும் பிறவற்றைவிடச் சமூக முக்கியமுடையதாயும் அதனைக் கையாளாமல் பிற முரண்பாடுகளைக் கையாள இயலாதபடியும் அமையுமானால், அந்த முரண்பாட்டைப் பிரதான முரண்பாடாகவோ உடனடியான முரண்பாடாகவோ கொண்டு செயற்படும் தேவை ஏற்படுகிறது.

வர்க்க முரண்பாட்டை அடிப்படையானதாகக் கொள்ளும் மாக்சிய லெனினியர்கள் தேசிய விடுதலைப் போராட்டங்களையும் நிறவாத எதிர்ப்புப் போராட்டங்களையும் தேசிய இனங்களின் விடுதலைக்கான போராட்டங்களையும் சாதியத்திற்கு எதிரான போராட்டங்களையும் பல நாடுகளிலும் முன்னெடுத்துள்ளனர், அல்லது அவற்றுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர். ஆணாதிக்கத்திற்கெதிரான மாக்சியர்களின் குரல் எப்போதுமே வலுவானதாக இருந்து வந்துள்ளது.

அது எப்படி இயலுமாகிறது? தேசியவாதிகளோ தலித்தியவாதிகளோ முதலாளியப் பெண்ணியவாதிகளோ குறிப்பான ஒரு வகைக்குரிய ஒடுக்குமுறைகள் தவிர்ந்த பிறவற்றைக் கண்டுகொள்ள ஏன் மறுக்கிறார்கள்? சில ஒடுக்குமுறைகளை மட்டுமே ஏன் ஏற்கிறார்கள்? இங்கு தான் அடையாளஞ் சார்ந்த உலக நோக்கின் முக்கியத்துவம் புலனாகிறது. பின்னவீனத்துவத்தின் பேரால் பொதுமைப்படுத்தல் ஏன் மறுக்கப்படுகிறது என்பது புலனாகிறது.

தனியே ஒரு அடையாளஞ் சார்ந்தே சமூக முரண்பாடுகளைப் பார்ப்பது அந்த அடையாளத்திற்கு உட்பட்ட அனைவரதும் நலன் சார்ந்ததல்ல என்பதையே இன, மத, சாதி அடையாளங்களின் அரசியலும் முதலாளியப் பெண்ணிய அரசியலும் உணர்த்தியுள்ளன. அடையாளங்களைத் தனித்தனியாகவோ சேர்த்தோ வலியுறுத்துகிற சக்திகள் அந்த அடையாளங்கட்கும் அப்பாலான வேறு அடையாளம்

ஒன்றை மனதிற் கொண்டே அவ்வாறு வலியுறுத்தக் கூடும் என்பதை நாம் மறக்காலாது. அதாவது, ஈற்றில், வர்க்க நலன்களே முதன்மைப்படுத்தப் படுகின்றன என்பது தான் உண்மை. அவ் வர்க்க நலன்கள் பெருமளவும் ஒடுக்கும் வர்க்கம் ஒன்றினது நலன்களாக இருந்து வந்துள்ளதையும் நாம் காணுகிறோம்.

தொழிலாளி வர்க்க அரசியல் தனியே தொழிலாளர் நலனை மட்டும் முதன்மைப்படுத்தி பிற சமூக ஒடுக்குமுறைகளைப் புறக்கணிக்கும் என்றால் அது தொழிற்சங்கவாத அரசியல் போற் சீரழிய நேரும். தொழிலாளி வர்க்கத்தை மாக்சியம் முக்கியப் படுத்துவது, அவ் வர்க்கத்தால் மட்டுமே முழுச் சமூகத்தையும் விடுவிக்க இயலும் என்பதனாலாகும். எனவே தான், மாக்சியம் தனது விருத்திப் போக்கில் கொலனிய விரோத, ஏகாதிபத்திய விரோதப் போராட்டங்களை ஆதரித்தது. மாக்சியர்கள் அவற்றில் பங்குபற்றினர். தலைமை தாங்கிப் போராடியும் உள்ளனர். இடதுசாரிச் செல்வாக்குக் கொண்ட தேசிய விடுதலைப் போராட்டங்கள், பிற சமூக ஒடுக்கு முறைகளைக் களையும் வழிகளையும் வகுத்துள்ளன.

அடையாள அரசியல் என்பது தெளிவான அரசியல் அடிப்படையில் அமையாத போது, அது தோல்விக்கும் ஆதிக்க வர்க்கங்களை வலுப் படுத்துவதற்கும் உதவுவதைக் காண்கிறோம். மாறாக, அதன் அரசியலின் அடிப்படை தெளிவாக உள்ளபோது, குறிப்பிட்ட அடையாளங்கட்கு அப்பாலும் அது சமூக விடுதலைக்கும் சமூக நீதிக்கும் பங்களிக்கிறது.

அடையாள அரசியல் ஒரு குறிப்பிட்ட சமூக அடையாள நலன்கட்குத் தன்னை வரையறுக்கும் போது தன்னைத் தனிமைப் படுத்துகிறது. அந்த அடையாளத்துக்குரியோர் ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் உட்படுவதற்கான அடிப்படை முரண்பாடுகளை அது ஆராயும் போது, அதன் அணுகுமுறை வேறுபட்டதாக அமைகிறது. அதன் போராட்டம் நீதிக்கான பிற போராட்டங்களுடன் இணைகிறது.

மாக்சிய லெனினியத்தின் சிறப்பு என்னவென்றால், அடையாள அரசியலை அதன் அடையாளச் சிறையினின்று விடுவித்து நீதிக்கான பிற போராட்டங்களுடன் அதை இணைக்க வழிகாட்டும் ஆற்றலை அதுவே வரலாற்றிற் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளமையாகும்.

*****

www.tamilarangam.net

# சர்வதேசச் சமூகமும் வரலாறும் விடுதலையும்: சில குறிப்புகள்

## அஸ்வத்தாமா

**அறிமுகம்**
இன்று லிபியாவில் நேற்று ஈராக்கில், ஆப்கானிஸ்தானில் என எல்லாவற்றிலிலும் "சர்வதேசச் சமூகம்" எவ்வாறு நடந்துகொள்கிறது என்பதைப் பற்றி வியப்பதற்கு எதுவுமில்லை. அது எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அப்படித்தான் நடந்து கொள்கிறது. இதற்கிடையில் லிபியாவில் பொதுமக்களைக் காப்பாற்ற தலையிட்ட ஐ.நாவும் சர்வதேசச் சமூகமும் இலங்கைத் தமிழர் விடயத்தில் அவ்வாறு நடந்துகொள்ளாமல் தமிழர்களை ஏமாற்றிவிட்டதாகப் பத்திரிகைகள் எழுதுகின்றன. நாங்கள் வரலாற்றைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இற்றைக்குப் பதினேழு ஆண்டுகளுக்கு முன் ருவாண்டாவில் நூறு நாட்களில் எட்டு இலட்சம் டுட்சி சிறுபான்மையினர் படுகொலை செய்யப்பட்ட போது ஐ.நாவும் சர்வதேசச் சமூகமும் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன. இக் காலப்பகுதியில் ஐ.நாவின் அமைதிகாக்கும் படைகளுக்கு தலைமை தாங்கிய ஜெனரல் ரோமியோ டிலார் *(Romeo Delaire)* தனது "பிசாசுடன் கை குலுக்குதல்" *(Shaking Hands with the Devil)* என்ற நூலிற் பின்வருமாறு எழுதுகிறார்:

> *"மேற்குலகுக்கும் ஐ.நாவிற்கும் ருவாண்டாவில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று படுகொலைகள் தொடங்கிய போதே தெரியும். ஆனால் யாருக்கும் ஆபிரிக்கக் கண்டத்தின் ஒரு மூலையில் உள்ள நாடு பற்றி அக்கறை இல்லை. மூலோபாய ரீதியில் தேவைப்படாத கறுப்பர்களைக் கொண்டிருக்கின்ற ஒரு நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இனப் படுகொலைகளைப் பற்றிக் கவலைப்பட யாரும் தயாராக இல்லை. அவர்களைப் பொறுத்தவரையில், ருவாண்டாவில் நடந்து கொண்டிருந்ததெல்லாம் நாகரீகமற்ற பழங்குடி இனக் குழுமங்களுக்கிடையிலான சண்டை மட்டுமே".*

இது ருவாண்டாவிற்கு மட்டுமல்ல, இலங்கை உட்பட்ட பல நாடுகளிலும் “சர்வதேசச் சமூகம்” எவ்வாறு நடந்து கொண்டிருக்கிறது, இனியும் எவ்வாறு நடந்து கொள்ளும் என்பதற்கான வரலாற்றின் சாட்சியாக இருக்கிறது. அடக்குமுறையாளர்களும் ஆளும் வர்க்கங்களும் சர்வதேசச் சமூகம் பற்றி அதிகமாகவே பேசுவதைக் கேட்கிறோம். தங்களின் அடக்குமுறைகளையும் அராஜகங்களையும் கேள்விக்கு உட்படுத்தாத வரை, சர்வதேசச் சமூகம் பற்றி மகிழ்ச்சி உடையவர்களாகவே ஆளும் வர்க்கத்தினரும் அடக்குமுறையாளர் களும் இருப்பர். அடக்குமுறைகளினதும் ஆதிக்கங்களினதும் ஒட்டு மொத்த வடிவமாக இருக்கும் சர்வதேசச் சமூகம் எனப்படுகின்ற ஏகாதிபத்தியத்தின் தலையீட்டின் மூலம் அடக்கி ஆளப்படும் மக்களினது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று நம்புவது இன்றைய பொதுவான போக்காக இருக்கிறது. அடக்குமுறை அரசு யந்திரத்திற்கு எதிராக மக்களின் போராட்ட சக்தியைப் புதிய போக்கிற்கு ஏற்பக் கட்டி வளர்க்க முடியாத ஜனநாயக இடதுசாரிச் சக்திகளும் சர்வதேசத் தலையீடுகளைத் தத்தம் நிலையில் நின்று வரவேற்பவர்களாகவே இருக்கின்றனர்.

அதேபோல, முரண்பாடுகளை ஊக்குவித்து மோதல்களை உருவாக்கி யுத்தங்களைத் திணித்து அதிற் பாதிக்கப்படுவர்களுக்கும், அதே வேளை, அடக்குமுறை அரசாங்கங்களுக்கும் மனிதாபிமான ரீதியாக உதவுவதாகக் கூறி உலக மேலாதிக்க சக்திகள் செயலாற்று கின்றன. மேலும், இயற்கை அனர்த்தங்களின் போதும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் எனவும் மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுக்க எனவும் மேலாதிக்கச் சக்திகள் நாடுகளில் தலையிடு கின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சர்வதேசச் சமூகம் என்ற போர்வைக்கு உள்ளிருக்கும் ஏகாதிபத்தியத்தை வரவேற்று உபசரிக்கும் நிலையில் பல்வேறு பிரிவினர் இருக்கின்றனர்.

இதன் பின்னணியிலேயே விடுதலை பற்றியும் விடுதலைக்கான போராட்டம் பற்றியும் பேச முடிகிறது. விடுதலைப் போராட்டம் தேசிய வாதத்துடன் நெருங்கிய தொடர்புடையது. பல சந்தர்ப்பங்களில் தேசியவாதம் சர்வதேசச் சமூகத்துடன் ஒட்டி உறவாடுகிறது. அந்நியத் தலையீட்டைக் கூவி அழைக்கிறது. விடுதலைப் போராட்டத்திற்கு குழி பறிக்கிறது. இவை வரலாற்று நோக்கில் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியவை. ஏனெனில் தேசியத்தின் திசைவழியானது வரலாறு பற்றிய புனைவுகளாலும் நம்பிக்கைகளாலுமே கட்டியமைக்கப்படுகிறது. நம்மிடம் வந்து நாம் பழங்காலத்தில் நாகரீகச் சிகரங்களை தொட்டுக் கொண்டு இருந்தோம் என்று யாராவது சொல்லிவிட்டால், நாம் புளகாங்கிதம் அடைகிறோம். நாம் தற்போது எவ்வளவு தூரம் முன்னேறியிருக்க வேண்டுமோ அவ்வளவு தூரம் முன்னேறாமல் பின்

www.tamilarangam.net

தங்கி இருந்திருந்தால் உடனே அதற்கான காரணத்தை குறிப்பிட்ட உள்நாட்டு, வெளிநாட்டுச் சதிகாரர்களிடம் நாம் தேட ஆரம்பித்து விடுகிறோம். பெனடிக்ற் அன்டர்சனின் *(Benndict Anderson)* கற்பனையான சமூகங்கள் (Imagined Communities) என்ற நூல், தற்போதைய நவீன யுகத்தில் புதிதாக நாம் சுவீகரித்த தேசிய விருப்பின் அடிப்படையில் நமது கடந்த காலத்தை கற்பனையில் மீளக் கட்டமைப்பது குறித்து நமது கவனத்தை ஈர்க்கிறது. உண்மையில் இந்த குறுகிய வாதம் வெறுமனே திரிந்து போன தேசியவாதம் மட்டும் அல்ல. சொல்லப்போனால், மதம், இனம், சாதி என்பது போன்ற ஒரு கற்பனை விசித்திரம் தான். இதுபோன்ற பல்வேறு அடையாளங்கள் கலந்தும் முரண்பட்டும் உள்ளார்ந்து வினை புரிந்தும் இருக்கும் ஆசிய மற்றும் ஆபிரிக்க சமூகங்களில் நீண்ட நெடுங்காலமாகத் தமது சார்புநிலைக்கு தகுந்தாற் போல் வரலாற்றை மீளக் கட்டமைக்கும் முயற்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருந்திருக்கின்றன.

வரலாற்றின் ஆபத்துக் குறித்து வரலாற்றாசிரியர் இர்∴பான் ஹபீப் *(Irfan Habib)* பின்வருமாறு சொல்கிறார்:

> *"கடந்த கால மோகம் என்பது ஒரு தனிமனிருக்கு எப்படியோ அது போலத் தான் வரலாறு என்பது நாட்டு மக்களுக்கு என்பதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். 'சிலரது சதிகாரர்களின் சதி காரணமாய் என்னை நான் உணர்ந்து கொள்வது தவறிவிட்டது' என எனது மனதுக்குள் முடிவு செய்தால் அது என்னை எங்கு கொண்டுபோய் விடும்? இந்த மாதிரியான தவறான எண்ணங்கள் நான் எனது சக மனிதர்களுடன் சுமுகமான உறவு கொண்டிருப்பதைப் பாதிப்பதோடு மட்டுமன்றிக் கடைசியில் எனக்குள் புதைந்து கிடக்கும் ஊனங்களையும் துகிலுரிந்து காட்டிவிடும். இப்படியாகத் தனியொருவருக்கு நடப்பதே, கண்டிப்பாகக் கற்பனை வரலாறு தந்த போதையில் மிதக்கும் நாட்டு மக்களுக்கும் நடக்கும். பொய் வரலாறு எவ்வளவுதான் உடனடி, குறுகிய காலப் புகழாரங்களைச் சூட்டிய போதிலும், அது, மக்களுடைய ஒழுக்கநெறி எனும் உயிர் நரம்பைக் கத்தரித்து, முன்னேறுவதற்கான அவர்களுடைய திறனை அறுத்து எறிந்து விடும். ஆகவே இந்த மாதிரியான கதையளக்கும் வரலாறுகளை எந்த விதத்திலும் நாம் நியாயப்படுத்தி விடமுடியாது".*

வரலாற்றின் கைதியாக ஒரு சமூகம் இருக்கும்வரை, அச் சமூகம் தனது முன்னேற்றத்திற்கான தடையைத் தானே இட்டுக் கொள்கிறது. இன்றைய நவகொலனித்துவ உலக ஒழுங்கில், தேசியம் பல புதிய வடிவங்களை எடுக்கிறது. எல்லோரும் உலகமயமாகி இருக்கிறோம்.

www.tamilarangam.net

ஆனால் எம் நினைவுகளையும் பூர்வீக வீரப்பிரதாபங்களையுஞ் சுமந்தபடி தான் பயணித்துக்கொண்டிருக்கிறோம். வரலாற்றைச் சரியாக விளங்கிக்கொள்ள முடியாதபடி நம் முன்முடிவுகளோடு நாம் கட்டுண்டிருக்கிறோம். உரிமைகட்கான அவாவும் ஜனநாயகத்திற்கான தேவையும் விடுதலைக்கான போராட்டங்களும் வரலாறு முழுவதிலும் நிறைந்து இருக்கிறது. இனிவரும் வரலாற்றிலும் அவ்வாறே இருக்கும். அதனடிப்படையில் விடுதலைக்கான போராட்டங்களில் சர்வதேசச் சமூகம் எவ்வாறு நடந்துகொண்டிருக்கிறது என்பதையும் வரலாற்று நோக்கிலும் போக்கிலும் பார்க்கும் முயற்சியே இக் கட்டுரை.

### வரலாற்றுப் பார்வை

பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில், எல்லா மனிதர்களும் சமமானோராகப் படைக்கப்பட்டவர்கள் என்ற அமெரிக்கக் குடியரசின் கம்பீரமான பிரகடனம், அடுத்து வந்த எண்பது ஆண்டுகளுக்கு லட்சக்கணக்கான கறுப்பு அமெரிக்கர்களை அடிமைகளாக இருக்கும் படி அரசியல்மைப்புச் சட்டத்தின் மூலம் அனுமதித்ததனாற், பொருளற்றதாகியது. அமெரிக்கப் புரட்சியிலிருந்தும், பிரெஞ்சுப் புரட்சியிலிருந்தும் துவங்கிய பூர்ஷ்வா ஜனநாயகத்திற்கான திட்டம் மூன்று முக்கிய தன்மைகளை உள்ளடக்கியிருந்தது.

1. *அரிஸ்டாட்டில் துவங்கி ரூஸோ வரையானவர்களின் மிக முற்போக்குத் தன்மை வாய்ந்த அரசியற் சிந்தனைகளை விட ஜனநாயகம் குறித்த கொள்கை அளவில் மிகக் குறைவான சுருங்கிய பார்வையே அது கொண்டிருந்தது.*

2. *துவக்க காலத்திலிருந்தே அது பொருளாதாரம் என்பதை ஜனநாயகத்திலிருந்து தனிமைப்படுத்திச், சமத்துவம் என்பதற்கு வெறும் சட்டபூர்வமான விளக்கமளித்துப் மக்களிற் பெரும் பகுதியினரை வாக்களிப்பதிலிருந்து எவ்வளவு தூரம் விலக்க முடியுமோ அவ்வளவு தூரம் விலக்கி வைத்தது. ("மக்களாகிய நாம்" என்ற பெயரில் வெளியிடப்பட்ட அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனச் சொற்றொடர் ஒரு வெற்றுச் சொற்றொடராகும். அது பெண்களையோ வெள்ளையரல்லாத பூர்வ குடியினரையோ ஆபிரிக்காவை மூலமாகக் கொண்ட அடிமைகளையோ குறிப்பதல்ல).*

3. *பூர்ஷ்வா அமைப்பு எப்போதுமே தன் சாதனைகளைப் பெருமளவுக்கு மிகைப்படுத்திக் கூறியுள்ளது.*

எந்தவொரு ஐரோப்பிய நாட்டிலும், முதலாம் உலக யுத்தத்திற்கு பிந்தைய காலம் வரையிலும், பூர்ஷ்வா ஜனநாயகம் முழுமை

www.tamilarangam.net

அடையவில்லை. முடியாட்சி என்பதே அன்றைய நாட்களின் சட்டமாக இருந்தது. ரஷ்யாவிலும் ஜேர்மனியிலும் ஒஸ்ற்ரியாவிலும் ஏகாதிபத்திய முடியாட்சிகள்; பிரிட்டனில் அரசியல் சட்ட அமைப்புக்குட்பட்ட முடியாட்சி; ஸ்பெயினிலும் போர்த்துக்கலிலும் அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி அமைப்பபைவிடத் தாழ்ந்த முடியாட்சி அமைப்புக்கள் என வேறுவேறு வகைப்பட்ட, ஆனால் முடியாட்சியை மையப்படுத்திய, அரசுகளே இருந்தன. முதலாம் உலக யுத்தத்திற்கு பிந்தைய சூழலில் பொல்ஷ்விக் புரட்சி ரஷ்ய முடியாட்சியை அகற்றியது. ஆனால், ஜேர்மனி, இத்தாலி, ஒஸ்ற்ரியா, ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகிய நாடுகளின் பாரம்பரிய அரசுகள், நிலையான ஜனநாயக அமைப்புகளுக்கு வழிவிடுவதற்கு மாறாக, ஃபாசிசத்திற்கும் ராணுவ சர்வாதிகாரத்துக்கும் வழிவகுத்தன.

மன்னர்களும் ஃபாசிஸவாதிகளும் ராணுவ சர்வாதிகாரிகளும் தராளவாத ஜனநாயகவாதிகளும் மிகத் தீவிரமாக தங்களுக்கிடையே கணக்குத் தீர்த்துக் கொண்டிருந்தபோது, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சில நிகழ்வுகள் நடைபெறத் துவங்கின. அதுவும் அவர்களின் முதுகுக்கு பின்னாலேயே ஆளும் அமைப்புகளுக்கு எதிராக எழுந்தவற்றில் நான்கு வகையான சவால்கள் மட்டும் நீண்ட காலத்திற்கு தீர்மானகரமானவையாக விளங்கின.

1. சொத்துடமையாளர்களின் ஆட்சிக்கெதிரான தொழிலாளர், விவசாய இயக்கங்கள்.

2. உலகின் பிற பகுதிகளில் ஐரோப்பிய கொலனியாதிக்கத்திற்கு எதிரான போராட்டங்கள்.

3. ஆணாதிக்க சக்திக்கும் முன்னுரிமைக்கும் எதிராகப் பெண்களின் சமத்துவத்திற்கும் முன்னேற்றத்திற்குமான போராட்டங்கள்.

4. அடிமைத்தனத்திற்கும் இனவெறிக்கும் எதிராக வெள்ளை இனத்தவர்களின் குடியேற்ற நாடுகளான வட அமெரிக்காவிலும் கரிபியன் பகுதியிலும் மையம் கொண்ட உலக அளவிலான போராட்டங்கள்.

ரஷ்யாவின் பொல்ஷ்விக் புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து அலையலையாக உருவான புரட்சிகள் குறிப்பாக இத்தாலி, ஹங்கேரி மற்றும் ஜேர்மனியில் மிகத் தீர்மானகரமான முறையில் தோற்கடிக்கப் பட்ட பிறகு, நாஜிகளின் மூன்றாம் ரைஹ் (Third Reich) உருவான எல்லையற்ற வெற்றிக் களிப்பில் அதுவே “வரலாற்றின் முடிவு” என் அறிவிக்கப்பட்டது. அதன்பிறகு 1990இல் சோவியத் யூனியனின் சிதைவுக்குப் பிறகு அமெரிக்கா வெற்றிவாகை சூடிய பின்னணியில், மீண்டுமொரு முறை, “வரலாற்றின் முடிவு” என்பது அறிவிக்கப்பட்டது.

[மேலதிக தகவல்களுக்கு ஃபிரான்சிஸ் ஃபுகுயாமாவின் *(Francis Fukuyama)* 'வரலாற்றின் முடிவு' *(The End of History and the Last Man)* என்ற நூலை வாசிக்கவும்]. சீனப் புரட்சிக்குப் பிறகு, 1950களிலும் அல்ஜீரியா முதல் இந்தோசீனம் வரை பல்வேறு இடங்களில் புரட்சிகரமான போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதிலும் அமெரிக்காவின் பொருளாதார வல்லுநர்களின் "மூலதனத்தின் பொற்காலம்" துவங்கிவிட்டது என்ற கூற்றும் புகழ்மிக்க அமெரிக்க சமூகவியலாளர்களின் "தத்துவத்தின் முடிவு" என்கிற ஆய்வும் சேர்ந்து மூலதனத்தின் முன்னால் எல்லாத் தத்துவங்களும் பின்வாங்கிவிட்டன என்ற பொருளில் உறுதியான எதிர்ப் புரட்சிப் போக்குக்களாக இருந்ததைக் காணமுடிந்தது. இதனடிப்படையில் மூலதனம் பிரதானமாக்கப்பட்டு அதனடிப்படையிலே அனைத்தும் வியாக்கியானம் செய்யப்பட்டன.

சர்வதேசச் சமூகம், சோவியத் யூனியனின் சிதைவை 1990கள் நினைவுபடுத்துவது போல, அதே காலகட்டத்தில் தென் ஆபிரிக்காவின் நிறவெறி ஆட்சி முடிவுக்கு வந்ததை நினைவுபடுத்துவதில்லை. வெற்றியடைந்த புரட்சிகளைப் பற்றி அதற்கு நினைவில் நிற்பது அவற்றின் வெற்றிகளல்ல, மாறாக அவை சந்தித்த தோல்விகளே. திறந்த ஒரு புண்ணைப் போல, அவற்றை நினைவில் வைத்திருக்கச் செய்வதில் ஆதிக்கச் சக்திகள் சோர்வதில்லை. எனினும், ஒருவர் வெற்றிகளிடமிருந்தல்லாமல் தோல்விகளிடமிருந்தே அதிகம் கற்றுக் கொள்கிறார் என்பது முக்கியமானதாகும். முதலில் பொல்ஷ்விக் புரட்சியின் வடிவத்தைப் பின்பற்ற முயன்ற சீனா பிறகு தன்னுடைய சொந்த வழியின் மூலமே வெற்றியடைந்தது. கியூபா சீனாவைப் பின்பற்றாதது போக, லத்தீன் அமெரிக்காவின் கணக்கற்ற புரட்சிக்கான முயற்சிகளில் கியூபா பின்பற்றப்படவில்லை. வெற்றிகரமான புரட்சிகளில் கஷ்டமான ஒரு விஷயம் ஏதெனில் அவற்றைத் திரும்பவும் அதேபோல் நடத்த முடியாது என்பதுதான்.

*"புரட்சிகள் மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தும் வகையில் திடீரென வெளிப்படுகின்றன. 1917ன் அக்டோபர் புரட்சியை ஏப்ரலில் கணித்த லெனினின் துணிச்சல் யாருக்கும் இருக்கவில்லை; எங்கிருந்து வந்தன என்பது தெரியாமல் கஸ்ட்ரோவின் கெரில்லாப்படை கியூபாவின் கடற்கரைக்கு வந்து பிறகு ஹவானா நகருக்குள் நுழைந்தன. சீனா அல்லது வியட்நாமைப் போல பல பத்தாண்டுகளில் நிகழ்ந்த புரட்சிகளிலும் இதே விதி பொருந்துகிறது. ஒரு நீண்ட அடைகாக்கும் காலத்திற்குப்பின் அளவுநிலை மாற்றம் குணரிதியாக மாற்றமடையும் போது, ஆளும் வர்க்கங்களின் கோட்டைகள் மிக வேகமாகச் சரிகின்றன என்பதே அந்த விதி. புரட்சிகளாக நடைபெறாத அதே*

www.tamilarangam.net

*சமயம், மாபெரும் மக்கள் எதிர்ப்பு இயக்கங்களாக அவை நடைபெறும் போதும் அவற்றைக் கணிக்க முடிவதில்லை 1950களில் தத்துவத்தின் முடிவு என்ற கோட்பாட்டை உரத்துக் கூவிய அமெரிக்க அறிவுஜீவிகளாகல் ஒரு பத்து வருடக் காலத்திற்குள்ளாகவே, எந்த ஒரு ஏகாதிபத்திய நாடும் சந்தித்திராத வகையில் மிகப்பெரும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தால் தங்கள் நாடு சூழப்படப் போகிறது என்பதை அறிய முடியவில்லை"* எனப் புரட்சிகளின் வரலாற்றுப் போக்கை விளக்குகிறார் அய்ஜாஸ் அஹமட் (Aijaz Ahamad).

இவ்வாறு மாற்றமடைந்த புரட்சிகள் பற்றிய படிப்பினைகளைப் எதிர்ப்புரட்சியாளர்களும் ஆளும் வர்க்கங்களுமே புரட்சியாளர்களை விடச் சரியாக உள்வாங்கிக்கொண்டனர். மூலதனத்தை அதிலும் குறிப்பாக நிதி மூலதனத்தை மையப்படுத்தியதாக உலக ஒழுங்கு மாறியதோடு சுரண்டலின் வடிவங்களும் ஒடுக்குமுறையின் தோற்றப்பாடுகளும் மாறத் தொடங்கின.

### அரசும் நிதி மூலதனமும் - பொது எதிரியின் உருவாக்கம்

அரசு முற்றிலும் நிதி மூலதனத்தோடு பின்னிப் பிணைந்ததாகிறபோது, சமுதாயத்திற்கு அப்பாற்பட்டதாக உயரே நின்றுகொண்டு சமுதாயத்தின் ஒட்டுமொத்த நலன்களையும் பாதுகாத்துக் கொண்டிருக்கிற கட்டமைப்புதான் அரசு என்ற அதன் தோற்றம் கலைகிறது. நிதி மூலதன ஆதிக்கக் காலகட்டத்திற்கே உரிய ஆட்சிகளின் எதேச்சாதிகாரத் தன்மையைக் காணுகிறபோது அரசுக்கு எவ்வித சமுதாய அங்கீகாரமும் தேவைப்படவில்லை என்று சிலர் கருதக்கூடும் சமுதாய அங்கீகாரம் என்பதற்கு ஒரு மாற்றாகத்தான் அரசு செயல்படுகிறது என்றும் எண்ணத் தோன்றும். ஆனால் உண்மை நிலை அதுவல்ல. மிகமிக மோசமான ஒரு எதேச்சாதிகார அரசுக்குக் கூட —ஒரு பாசிச ஆட்சிக்குக் கூட— என்ன தான் அது பயங்கர அடக்குமுறைகளைப் பரவலாகப் பயன்படுத்தினாலும், அதற்குப் பிறகும் சமுதாய அங்கீகாரம் தேவைப்படுகிறது. எதேச்சாதிகாரமும் அடக்குமுறைகளும் ஒருபோதும் சமுதாய அங்கீகாரத்துக்கு மாற்றாக முடியாது. அந்த அங்கீராத்தைப் பெற இப்படிப்பட்ட ஆட்சிகள் வேறு வழியைப் பயன்படுத்த முயல்கின்றன. சமுதாய மொத்தத்திற்கும் ஒரு பொது எதிரியை உருவாக்குவதுதான் அந்த வழி. அந்தப் பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தில் அரசு ஈடுபட்டிருப்பதாகக் கதை கிளப்பி விடப்படும். பெருமை அல்லது தேச கவுரவம் நிலைநாட்டப்படுதல் எனும் ஏகாதிபத்தியத் திட்டத்தின் பின்னே ஒரு பொது நோக்கத்திற்காகச் சமுதாயம் ஒன்று திரட்டப்படும். அல்லது தேசத்திற்குக் கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட அநீதி ஒன்றைச் சரிப்படுத்துவது என்ற பெயரில் ஏகாதிபத்தியத் திட்டம் ஒன்று

துவக்கப்படும். வேறு சொற்களிற் கூறுவதென்றால், பொருளாதார ஆளுமைக்களத்தில் இழந்த சமுதாய அங்கீகாரத்தை வேறு வகையில் ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்யப்படுகிறது. அதற்காக, அடிப்படையில் ஏகாதிபத்தியத்தன்மை வாய்ந்த, இனவாத, அந்நியப் பகைமை கொண்ட ஒரு தேசம் என்பது கட்டப்படுகிறது. அந்தத் தேசம் என்ற கட்டுமானத்தைச் சுற்றி ஒரு பொதுக்கருத்து உருவாக்கப் படுகிறது. அதற்கு ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அந்த ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதே நிதி ஆதாய நோக்கங்கள் தாம் சமுதாயத்தின் பொது எதிரியை எதிர்த்துப் போராடுவது என்ற பெயரில் அல்லது அந்தப்பொது நோக்கத்தை எட்டுவது என்ற பெயரில் நிதி மூலதனத்தோடு பின்னிப் பிணைந்ததாக அரசு இருப்பதும் பரவலாக பயங்கர அடக்குமுறைகள் கட்டவிழ்ந்து விடப்படுவதும் நியாயப் படுத்தப்படுகின்றன. அந்தப் பொதுத் திட்டத்தின் பெயரால் யுத்தம், ஆக்கிரமிப்பு, நாடுகளை வளைத்து இணைத்துக் கொள்வது ஆகிய அனைத்தும் நியாயப்படுத்தப்படுகின்றன. எனினும், இவை யாவும் உருவகப்படுத்துவது அரசின் சமுதாய அங்கீகாரத்துக்கான ஒரு மாற்றுத் தேடலைத்தான். இந்த மாற்றுத் தேடல் நிதி மூலதனத்தோடு பின்ணிப்பிணைந்த அரசைத் தக்கவைக்கவும் சுரண்டலைத் தொடரும் வழியாகவும் இருந்தது.

நவீன (முதலாளித்துவக்) காலத்திற்கு முந்தைய அனைத்துச் சமுதாயங்களும் விவசாயச் சமூகங்களாகவே இருந்தன. அவற்றின் உற்பத்தி குறிப்பான பல்வேறு முறைகளதும் நியாயங்களினதும் அடிப்படையில் அமைந்திருந்தது. மாறாக, முதலாளித்துவச் சந்தைச் சமுதாயத்தில் மூலதனத்திலிருந்து அதிகப்படியான லாபம் பெறுவதே பிரதான விதியாக அமைந்துவிட்டது. நவீன முதலாளித்துவ விவசாயம் பெரிய அளவிலான பணக்காரக் குடும்ப விவசாயமாயிருப்பினும், வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பல்தேசிய நிறுவனங்களும் மூன்றாம் உலக விவசாயிகளின் உற்பத்தியின் மீது வலுவான தாக்குதலைத் தொடுத்து வருகின்றன. 2001ஆம் ஆண்டு கட்டார் நாட்டின் டோஹா நகரில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் கூட்டத்தில் அதற்கான பச்சை விளக்குக் காட்டப்பட்டது. அத் தாக்குதலுக்குப் பலர் பலியாகின்றனர். அவர்களில் மிகப் பெரும்பாலோர், மனிதக் குலத்தின் அரைவாசியான மூன்றாம் உலகின் விவசாயிகளே ஆவர்.

உலக வர்த்தக அமைப்பின் சந்தைப் போட்டிக் கோட்பாட்டை நியாயப்படுத்த ஒரு பெரிய வாதம் முன்வைக்கப்படுகிறது. பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஏற்பட்ட வளர்ச்சி, நவீனமான வளமிக்க நகர் சார்ந்த தொழிலமைப்புகளின் துணையோடு நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ததுடன், விவசாய விளைபொருட்களை

www.tamilarangam.net

ஏற்றுமதி செய்யும் அளவிற்குக் கொண்டு சென்றது. அவ்வாறே, தற்போதைய மூன்றாம் உலக நாடுகளிலும் அத்தகைய வளர்ச்சி ஏற்படாமல் போகுமா என்பதே அவர்கள் முன்வைக்கும் வாதமாகும்.

மேற்கூறிய முன்மாதிரியை மூன்றாம் உலக நாடுகளில் மீள ஏற்படுத்த வாய்ப்பில்லை என்பதற்கான இரண்டு முக்கிய காரணிகளை இவ் வாதம் கணக்கில் எடுக்கத் தவறுகிறது. முதலாவதாக, நூற்றைம்பது ஆண்டுகளாக விருத்திபெற்ற ஐரோப்பிய மாதிரி என்பது தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க வல்ல தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களை உருவாக்கியது. இன்றைய நவீனத் தொழில் நுட்பத்தின் கீழ், மிகவும் குறைவான வாய்ப்புடைய சந்தைகளில், தங்களின் தொழில் உற்பத்திகள் போட்டியிட, மூன்றாம் உலகின் புதிய தொழில் அமைப்புகள் இந்த நவீன தொழில்நுட்பத்தை ஏற்றாக வேண்டும். இரண்டாவதாக இந்த நூற்றைம்பதாண்டுக் கால இடைவெளியில் ஐரோப்பாவில் மக்கள் தொகை குறைந்தது. வளர்முக நாடுகளில் அப்படி எதுவும் நிகழ வாய்ப்பில்லை.

உலக வர்த்தக அமைப்பும் அதன் ஆதரவாளர்களும் பரிந்துரைக்கும் 'முதலாளித்துவ சந்தையைத் தாராளமயமாக்குவதன் மூலம் நடைபெறும் நவீனமயமாக்கம்' என்ற ஆலோசனை இரண்டு கூறுகளைக் கொண்டது. இனி, வளர்ந்த நாடுகளைச் சார்ந்த, போட்டியிடும் திறமுடைய நவீன விவசாயிகள் உலக அளவில் உணவு உற்பத்தியில் ஈடுபடுவார்கள். எதிர்காலத்தில், வளரும் நாடுகளின் சில பகுதிகளில் இத்தகையோர் சிலர் உருவாகும் வாய்ப்பு இருக்கலாம். அதே வேளை, தற்போதைய மூன்றாம் உலக நாடுகளின் முன்னூறு கோடி விவசாயிகளிற் பெரும் பகுதியினர் ஓரங்கட்டப்பட்டு வெளியேற்றப்பட்டு ஏழ்மைக்குட் தள்ளப்படுவர். இறுதியாக அவர்கள் ஒதுக்கி வைக்கப்படுவர். அவ்வாறு பலியாவோரைச், சுற்றுச் சூழல் உள்ளிட்டுப், பொருளாதாரரீதியாக ஏழ்மையில் உழற்றுவதே தாராளமயக் கொள்கைகளின் நோக்கமாக உள்ளது. மேற்சொன்ன இரண்டு கூறுகளும் ஒன்றையொன்று ஏற்றுக்கொண்டு ஒன்றோடொன்று மோதிக் கொள்ளாமல் இணைந்து செல்கின்றன.

அடிப்படையில் அரசுக்கும் அடக்குமுறை ஆட்சியாளர்களுக்குத் தேவையானது ஒரு பொது எதிரி. அது அண்டை நாடொன்றாக இருக்கலாம். ஒரு சிறுபான்மைச் சமூகமாக இருக்கலாம். அடையாளங் காட்டிப் பெரும்பான்மையினரை அச்சத்திற்குட்படுத்தக்கூடிய ஏதாகவும் இருக்கலாம். அதன் மேற் பழியைப் போட்டுவிட்டுத் தங்கள் மூலதனக் கொள்ளையையும் சுரண்டலையும் எவ்விதத் தடைகளுமற்றுத் தொடர அவர்கட்கு முடிகிறது. கொலனித்துவமும், நவகொலனித்துவமும் அன்று இலகுவாகக் கண்டுகொள்ளப் பட்டன; எதிர்க்கப் பட்டன.

ஆனால், இன்று, உலகமயமாதல் நிகழச்சிநிரலின் கீழ், தேசிய அரசுகளினதும் அரசாங்கங்களினதும் வரவேற்புடனும் மக்களின் ஆதரவுடனும், 'மனிதாபிமான ஏகாதிபத்தியம்' தன் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கிறது. ஜனநாயகத் தன்மையோடு கூடிய சுதந்திரம் பூர்ஷ்வாக்கள் கூறும் சந்தையின் கற்பனையான சுதந்திரம் அல்ல: மாறாகத் தீவிரமான உண்மையான, சமத்துவத்திற்கான ஒடுக்கப் பட்டவர்களின் போராட்டத்தைப் பற்றியதாகும். இது சோசலிசம், தேச விடுதலை ஆகியவற்றுக்கான போராட்டங்களோடு இணையாமல் நீடிக்க முடியாது.

### தேசியமும் தேச ஒற்றுமையும்: புதிய யுத்திகள்

"தேசபக்தி என்பது அயோக்கியர்களின் புகலிடம்" என்ற புகழ் பெற்ற கூற்றை இங்கே நினைவூட்டல் தகும். தேசபக்தி ஒரு வலிய யுத்தியாகப் பயன்பட்டுள்ளது. அது மொழியாக, மதமாக, இனமாக எனப் பல்வேறு வடிவங்களில் தேவைக்கேற்றவகையில் பயன்படுத்தப் பட்டு வந்துள்ளது. அதைத் தனது வசதிக்கேற்பச் சர்வதேசச் சமூகம் பயன்படுத்துகிறது. விடுதலைப் போராட்டங்களைத் திசைதவறச் செய்யவும் மக்களிடம் அவற்றுக்குள்ள ஆதரவைக் குறைக்கவுமான யுத்தியாகப் அது பல வழிகளிற் பயன்படுகிறது. மத அடிப்படையில் தேசிய அடையாளத்தை வற்புறுத்திச் சமூகங்களை மேலும் பிளவுபடுத்த அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் உதவி வந்துள்ளனர். அதே வேளை, மத அடையாளங்கள் தங்களது சமுதாயங்களில் பெரும்பான்மை அதிகாரத்துக்கும் ஆளும் அதிகார வர்க்க நலன்களுக்கும் மாறாகக் குறுக்கிடாமல் நடவடிக்கை எடுக்கின்றனர். சர்வதேசச் சமூகத்தால் இந்துத்துவ வெறியாட்டம் நடத்தும் பாரதிய ஜனதா கட்சியுடனுன் நல்லுறவைப் பேண முடிகிறது. இலங்கையின் சிங்கள பவுத்த வெறி ஒரு பிரச்சினையல்ல. கிறிஸ்துவ மதத்தவருக்கு எதிரான வன்முறையைத் தூண்டிவிடுகிற ஹெல உறுமயவுடன் கூட நட்புறவு பாராட்ட அதற்கு இயலுமாயுள்ளது. இவற்றில் எதுவுமே தமது நலன்களுக்கு ஆபத்தாயில்லாத வரையில் ஒரு பிரச்சனையில்லை. திபெத்திய லாமா பவுத்தம் இன்று மற்றைய பவுத்தப் பிரிவுகளுக்குச் சமமாகவும் பல நேரங்களில் உயர்வாகவும் சர்வதேசச் சமூகத்தால் மதிக்கப்படுவது தலாய் லாமா என்கிற மதத் தலைவரது ஆன்மிக மேம்பாட்டினால் அல்ல. மாறாகத் தலாய் லாமா என்ற அரசியல்வாதிக்குச் சர்வதேசச் சமூகம் வழங்கும் முக்கியத்துவம் தொடர்பானது. சர்வதேசச் சமூகத்தின் தேவைகட்கு ஏற்ற கருவியாகத் தலாய் லாமா விளங்குவதன் பயனே அது.

இங்கு கவனிக்கத்தக்க விடயமெதுவெனில் எங்கெல்லாம் தேசமும் இனமும் மொழியும் மதமும் புனிதப்படுத்தப்பட்டு அவற்றின் நலன்

மனிதரது அடிப்படையான உரிமைகளையும் தேவைகளையும் உணர்வுகளையும் மறுக்கிற அளவுக்குப் போகிறதோ, அங்கு சமூகப் பற்றுக்குப் பதிலாகச் சமூகத்தைச் சின்னாபின்னமாக்கக் கூடிய வெறித்தனம் ஆட்சி செலுத்துகிறது. சர்வதேசச் சமூகம் அதை இயலுமாக்கிறது. இந்த ஆபத்தை வரலாறெங்கும் பார்க்க முடியும். ஜேர்மனியின் தூய ஆரிய அடையாளத்தைக் காப்பதற்காக யூதர்களை அழிக்க வேண்டியிருந்தது. தேசத் துரோகிகளாக அடையாளங்காணப் பட்டவர்களை இலக்கு வைக்க வேண்டியிருந்தது. அதன் பின்பு முழு உலகத்திற்கும் எதிராக ஒரு போரை நடத்த வேண்டி வந்தது. முழு அமெரிக்கக் கண்டமும் அவுஸ்திரேலியாவும் ஸ்பானிய, போர்த்துக் கேய, பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்களால் ஏறத்தாழ முழுமையான இன ஒழிப்பு நடவடிக்கைகட்குட்பட்டன. அத்தனை கொடுமைகளும் தேசங்களின் முடிக்குரிய மன்னர்களதும் மகாராணிகளதும் திருச்சபைகளினதும் பேராலும் அவர்களது பூரண அனுமதியுடனும் ஆசிகளுடனுமே மேற்கொள்ளப்பட்டன. அந்த மரபு அமெரிக்காவாலும் சர்வதேசச் சமூகத்தாலும் இன்று முழு மானிடத்திற்கும் எதிராக முன்னெடுக்கப்படுகிறது. “பொது எதிரி” என்ற கருத்தாக்கம் புதிய யுத்திகளினூடு செயற்படுத்தப்படுகிறது. உள்நாட்டில் ஒரு எதிரி இருப்பது எப்போதுமே வசதியானது. இல்லாவிடின் புறத்தே அதைக் கட்டமைக்கும் தேவை எழுகிறது. ஆனால் மதம், மொழி, இனம் என ஏதாவதொன்றைப் பயன்படுத்தி உள்நாட்டிலேயே எதிரியைக் கட்டமைக்கலாம். பொது எதிரியாக்கப்பட்டவர்களிடமிருந்து பெரும் பான்மை மொழி, பெரும்பான்மை மதம், பெரும்பான்மைப் பண்பாடு, பெரும்பான்மையினரின் நலன்கள் என்பனவற்றைப் பாதுகாப்பதை அரசு தனது பணியாகப் பிரகடனப்படுத்திக் கொள்ளுகிறது. அதை விட, இவ்வாறு அடையாளப்படுத்தப்படுகிற பெரும்பான்மை நலன்கள் தேசிய நலன்களாகின்றமையால், அவற்றுக்கு எதிரான மிரட்டல்களாகக் காணப்படுகிறவை தேசத்திற்கு எதிரான மிரட்டல்களாகின்றன. எனவே, தேசத்தைப் பாதுகாப்பதற்காக மிரட்டல்களுக்கெதிரான கடும் நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. அவை உரிமை மறுப்பு முதல் இன ஒழிப்புப்போர் வரை எவ் வடிவையும் எடுக்கலாம்.

**நிறைவாக**

பாட்டாளி மக்களின் எண்ணிக்கை வளர்ச்சியின் வலிமை அவர்களை ஒன்றுபடுத்துவதை எளிதாக்காமல், ஒரு முரண்நகையாகக், கடினமான பணியாக மாற்றியுள்ளது. மார்க்ஸின் காலத்தில் பாட்டாளிகள் எண்ணிக்கையிற் குறைவாகவும் ஒரு சில நாடுகளின் ஒரு சில நகரங்களில் மட்டுமே நெருக்கமாக வாழ்ந்து வந்தனர். இவர்களிற் பெரும்பாலோர் ஒரேமாதிரியான வேலைகளைச் செய்பவர்களாகவும், ஒப்பீட்டளவில் ஒரேமாதிரியான சூழல்களில் வசிப்பவர்களாயும்

இருந்தனர். இன்றைய உலகப் பாட்டாளிகளோ, பல தனித்த நாடுகளில், புவியியல் ரீதியாகப் பிரிந்து கிடக்கிறவர்களாயும், கலாசார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்டவர்களாயும், மதரீதியாகவும், இனரீதியாகவும் வேறுபடுகிறவர்களாயும், மொழிரீதியாகப் பிளவுபட்டு இருக்கிறவர்களாயும், இன, மதச, சாதி அடுக்குகளாய் வாழ்கிறவர்களாயும், சிக்கலான வேலைப் பிரிவினையைக் கொண்ட பல வேலைகளைச் செய்பவர்களாயும் நவீன உழைக்கும் வர்க்கத்தின் ஒரு பகுதியாக மிக அதிகமான எண்ணிக்கையில் பெண்களை உடையவர்களாயும் உள்ளனர். இந்த உலகப் பாட்டாளி வர்க்கத்திற்குள்ளும் அதற்கு வெளியிலும் ஊதியம், சமூக ஒதுக்கீடு ஆகியவற்றில் வேறுபாடுகளும் சமூகரீதியிலமைந்த பல தவறான முன் நிர்ணயிப்புகளும் ஏராளமாக நிறைந்திருக்கின்றன. இவை இன்று எதிர்நோக்கப்படும் பாரிய சவால்கள்.

தேசிய இன ஒடுக்கல் என்றாலும், வேறெந்தச் சமூக அடையாளத்தின் அடிப்படையிலான ஒடுக்கல் என்றாலும், அது குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் மீதான ஒடுக்குமுறை என்ற எல்லைக்குள் நின்றுவிட முடியாது. ஏனெனில், இன ஒடுக்கல் அதைவிடப் பாரிய ஒரு சமூக முரண்பாட்டின் வெளிப்பாடு மட்டுமே. தேசிய இன ஒடுக்கலுக்கு எதிரான போராட்டங்கள் அதைச் சரியாக அடையாளம் காணத் தவறுகிற போது தம்மை முடிவிற் பலவீனப்படுத்திக் கொள்கின்றன.

தேசிய இனப் பிரச்சினையும் தேசிய இன ஒடுக்கலும் இனங்களிடையிலான பிறவிப் பகையின் விளைவானவையல்ல. அவற்றுக்கு வேறு சமூகப் பரிமாணங்கள் உண்டு. குறிப்பாக, வர்க்கப் பரிமாணம் உண்டு. ஏகாதிபத்தியத்தினதும் மேலாதிக்கவாதிகளதும் நலன்களுக்கு அவற்றுடன் தொடர்பு உண்டு. அதனாலே தான் எந்தத் தேசிய இன விடுதலையும் ஏகாதிபத்திய எதிர்ப்பைத் தனது போராட்டத்தின் ஒரு பகுதியாக்காத வரை அது முழுமையான விடுதலைக்கு இட்டுச் செல்லாது. இதை அண்மைக் காலத்தில் ஈராக்கின் குர்திய விடுதலை இயக்கங்கள், கொசோவோ விடுதலை இயக்கம் போன்றவை மிகவும் தெளிவாக உணர்த்தின. ஏகாதிபத்தியத்தால் நன்கு ஏமாற்றப்பட்ட அவர்களிடமிருந்து கற்க நிறைய உண்டு.

தேசியவாதம் போன்று அல்லது தேசியவாதத்தை விட மோசமாக மதவாத அரசியல் மேலாதிக்க அரசியலாகவும் ஒடுக்குமுறை அரசியலாகவும் சீரழிந்துள்ளதை நாம் காணுகிறோம். தேசிய இன ஒடுக்கலுக்குட்பட்ட சமூகம் ஒன்றினுள் மதவாதம் கிளறிவிடப்படும் போது, விடுதலைப் போராட்டம் பலவீனப்படுகிறது. மதம் என்பது வசதியான ஒரு அரசியற் கருவியே ஒழிய மனித உறவுகளில் தீர்மானகரமான உறுதியான அரசியற் சக்தி அல்ல என்பதை உணர

www.tamilarangam.net

வேண்டும். மக்களின் விடுதலைக்கான அரசியல் எந்த மத அடையாளத்திலிருந்தும் எட்ட நிற்பது அவசியம் மட்டுமல்ல, ஒரு முன் நிபந்தனையும் கூட. அதே வேளை, மத அடிப்படையிலான எந்த ஒடுக்குமுறையையும் எதிர்ப்பதும் மத நம்பிக்கைக்கும் வழிபாட்டுக் குமான சுதந்திரத்தைக் காப்பதும் ஒரு உண்மையான தேசிய விடுதலை இயக்கத்தின் பொறுப்புகளுள் அடங்கும். மத வேறுபாடற்று ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தினதும் பிற ஒடுக்கப்பட்ட சமூகங்களதும் உரிமைக்காகப் போராட ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு இயலுமாகிறபோது அது பல வழிகளில் வலிமை பெறுகிறது. அதன் மூலம், கண்ணுக்குத் தெரிகிற பேரினவாத ஒடுக்குமுறையாளர்களை விட முக்கியமான எதிரிகளான பின்னாலிருந்து இயக்குகின்ற அந்நிய மேலாதிக்கவாதிகள் பற்றிய தெளிவுடன் செயற்பட இயலுமாகிறது.

சர்வதேசச் சமூகம் தற்போது யுத்தத்தை விற்கிறது. யுத்தங்களை ஊக்குவிக்கிறது. யுத்தங்களை நடத்துகிறது. அதனோடு மனிதாபிமான உதவிகள், மனித உரிமை மீறற் கண்காணிப்பு போன்ற பல்வேறு போர்வைகளில் தேசிய அரசுகளையும், அரசாங்கங்களையும் மிரட்டுகின்றது; கட்டுப்படுத்துகின்றது. மக்களுக்கு உதவுவது போன்று பாசாங்கு செய்து அவற்றின் சந்தை, நுகர்வு, லாபம், இராணுவ ஆதிக்கம் போன்றவற்றை நிலைநாட்டிக் கொள்கிறது. அரசியல் என்பது சமூக அறஞ் சார்ந்த விடயமாக இருந்த காலம் மலையேறி விட்டது. ஆனால் அறம் பிழைப்படுகிற போது அரசியல் சீரழிகிறது. அதை ஒரு சமூகம் பொறுத்துக் கொள்ளுமாயின் அச் சமூகம் தனது அழிவுக்கான பாதையைத் தானே தேடுகிறது. அழிவுக்கான பாதையிற் பயணப்படத் தொடங்கிய சமூகம் அதற்காக வருந்தத் தொடங்கும் போது அது தனது பாதையிலிருந்து மீளமுடியாத தொலைவுக்குச் சென்றிருக்கும். வரலாறு சொல்லும் பாடமும் அதுதான். இது விடுதலைப் போராட்டத்திற்கும் பொருந்தும் என்பதை நாம் மறக்கவியலாது.

*****

www.tamilarangam.net

*நவகொலனியத்தின் கீழ்த் தேசியமும் தேசமாதலும்*

# தேசங்களின் உருவாக்கம்

## இமயவரம்பன்

தேச அரசு என்பது முதலாளியத்தின் நலன்கட்கு உதவுவதற்காக உருவானது. எனினும் முதலாளியத்தின் சமச்சீரற்ற வளர்ச்சியும் இயற்கை வளங்களையும் வணிகத்தையும் மனித வளங்களையும் தன் ஆளுமையின் கீழ்க் கொண்டிருப்பதற்காக அது கொலனியத்தைப் பாவித்தமையும், நேரடியாகவோ மறைமுகமாகவோ கொலனி ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் தேசங்களின் உருவாக்கத்திற்கும் விருத்திக்கும் பாதிப்புக்களைக் கொண்டிருந்தன. 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதலாளியம் எகாதிபத்தியமாக விருத்தி கண்டமை, ஆட்சியாளர்களிடையே அதிகாரத்துக்கும் மேலாதிக்கத்துக்குமான மோதல்களையும் மீறி, ஒப்பீட்டளவில் தம்மிடையே நல்லிணக்கத்துடன் வாழ்ந்துவந்த பல்வேறு இனக் குழுமங்கட்கும் சமூகங்கட்கும் இடையிலான உறவை மோசமாக்கியது.

கொலனிய வல்லரசுகள் வெவ்வேறு பிரதேசங்களின் மீது ஆளுமை செலுத்த முற்பட்ட விதம் வல்லரசுக்கு வல்லரசு வேறுபட்டதுடன் வல்லரசின் தாயகத்தில் முதவாளிய உற்பத்தியின் முன்னேற்றத்திலும் தங்கியிருந்தது. அவை ஆளுமை செலுத்திய விதம், ஒரு பிரதேசத்தின் அதி முக்கியமான சமூக அமைப்பின் மீதும் தங்கியிருந்தது.

அரசியல் அல்லது இனத்துவ அடையாள அடிப்படையிற் சாத்தியமானவற்றைப் புறக்கணித்து, வரையறுத்த எல்லைகள் இல்லாத பிரதேசங்களினின்று, கொலனிய வல்லரசுகளின் நலன்கட்கு ஏற்றவாறு 'தேசங்களும்' தேச எல்லைகளும் உருவாக்கப் பட்டன. அதனை —அடிப்படை வேறுபாடுகள் சில உள்ளபோதும்— லத்தின் அமெரிக்காவிலும் மத்திய கிழக்கின் அரபுப் பிரதேசங்களிலும் ஆபிரிக்காவிலும் அரசுகளின் தோற்றம், காட்டி நிற்கிறது.

www.tamilarangam.net

மாறாகத், தென் ஆசியாவில், முழு ஐரோப்பாவையும் விடப் பன்மைப்பட்ட இன, மொழி, மதப், பண்பாட்டு அடையாளங்களைக் கொண்ட ஒரு பெருநிலப்பரப்பைப் பிரித்தானியக் கொலனியம் தனி ஒரு அரசாக்கியது. சீனாவைத் தம் ஆளுமைக்குட்படுத்திய கொலனிய வல்லரசுகள், அங்கு நேரடிக் கொலனி ஆட்சியை நிறுவவில்லை. மாறாக, ஒப்பிடுகையிற் சிறிய, ஆனால் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களைக் கட்டுப்படுத்தினர். இன-மொழி அடிப்படையிலும் பண்பாட்டு அடிப்படையிலும் தனித்துவமான வியற்நாம், கம்போடியா, லாவோஸ் ஆகியவற்றைக் கொண்ட பிரதேசங்கள் பிரெஞ்சுக் கொலனியத்தின் கீழ் இந்தோசீனம் எனப்பட்ட கொலனிய சமஷ்டி ஆகின.

கொலனி ஆட்சி தனது முடிவை நெருங்கியதும், எகாதிபத்தியம் நவகொலனியக் கட்டுப்பாட்டைப் பயன்படுத்த முற்பட்டது. சாத்தியமான இடத்துச், சில சமயம், தேசிய அடிப்படையின்றி நாடுகளைப் பிரித்தும், சில சமயம், நாடுகளின் விடுவிக்கப்படாத பகுதிகளைக் கைவிடாமலும், நேரடிக் கட்டுப்பாடு தொடர்ந்தது. சீனாவில் கோமின்டாங் ஆட்சி தோற்றதை அடுத்து, சீனாவின் தாய்வான் தீவில் ஜியாங் கைஷேக் சீனக் குடியரசை நிறுவுவதற்கு அமெரிக்கா உதவியது. அமெரிக்க வற்புறுத்தலால், 1972 வரை, அதுவே, சீனாவின் சட்டரீதியான அரசாங்கமாக ஐ.நா.வால் அங்கீகரிக்கப் பட்டது. சீனாவின் மீது சுமத்தப்பட்ட அரசியல், பொருளாதாரத் தனிமைப்படுத்தலால், சீனப் பிரதேசங்களான ஹொங் கொங்கையும் மக்காவுவையும், முறையே, பிரித்தானியாவிடமும் போர்த்துக்கலிடமும் இருந்து விடுவிப்பதை ஏறத்தாழ 20ம் நூற்றாண்டின் முடிவு வரை தடுக்க ஏகாதிபத்தியத்திற்கு இயலுமாயிற்று. கோமின்டாங் ஆட்சி சீனாவின் சட்டரீதியான அரசாங்கம் என்ற தகுதியை இழந்ததும், சீனாவிடமிருந்து சுதந்திரம் கோருமாறு, தாய்வானின் பிரிவினை வாதிகளுடன் அமெரிக்கா சதி செய்தது.

வியற்நாமில் கொலனிய ஆட்சியின் முடிவையடுத்தும் கொரியாவில் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களது தோல்வியையடுத்தும், அந்த நாடுகளை நீண்டகாலமாகப் —வியற்நாமை 1975 வரை, கொரியாவை இன்று வரை— பிரிவினைக்குட்படுத்தியே அமெரிக்க ஆதிக்கம் அங்கு இயலுமாக்கப்பட்டது. மறுபுறம், ஏகாதிபத்தியம், மலாயாவில் மலாயரின் ஆதிக்கத்தை ஊக்குவித்ததற்கும் அப்பால், பெருமளவும் இந்தோனீசியாவின் கட்டுப்பாட்டிலுள்ள கலிமன்டான் (போர்னியோ) தீவின் வட பகுதியிலுள்ள சபாவையும் சராவக்கையும் மலாயாவுடன் இணைப்பதற்கு இந்தோனீசியாவின் கடும் எதிர்ப்பின் நடுவே, 1963ல் மலாயா, சிங்கப்பூர், சபா, சராவக் ஆகியவற்றைக் கொண்ட மலேசிய சமஷ்டியின் உருவாக்கத்தை ஆதரித்தது. (1964ல் சிங்கப்பூரில் நடந்த

www.tamilarangam.net

இனமோதல் ஒன்றையடுத்து, சிங்கப்பூர் மலேசிய சமஷ்டியினின்று விலக்கப்பட்டது). குறிப்பிடத்தக்க விதமாக, ஏகாதிபத்தியம், கலிமன்டான் தீவின் வடக்கிலுள்ள எண்ணெய் வளம் மிக்க சிறிய புருனாய் எனும் சுல்தானிய அரசு சுதந்திர அரசாக இருப்பதை உறுதிப்படுத்தியது.

இவ்வாறு, ஏகாதிபத்திய நலன்களைச் சார்ந்து, கொலனிய ஆட்சியின் கீழும் நவகொலனிய ஆட்சியின் கீழும் ஐரோப்பாவுக்கு வெளியேயிருந்த பிரதேசங்களும் மக்களும், நாடுகளாகத் தொகுக்கப் பட்டதை நாம் காணலாம்.

வெற்றிகரமான கொலனிய எதிர்ப்புப் போராட்டங்கள், அராபியத் தலைவர்கள் சிலரை அராபிய அரசியல் ஒற்றுமையின் அடிப்படையிற் சிந்திக்கத் தூண்டியது. எகிப்தையும் சிரியாவையுங் கொண்டு 1958ல் நிறுவப்பட்ட ஐக்கிய அரபுக் குடியரசு 1961ல் கலைந்தது. விரைவாக அதையடுத்து, எகிப்தையும் சிரியாவையும் ஈராக்கையுங் கொண்டதாக ஐக்கிய அரபுக் குடியரசை மீள நிறுவும் ஈராக்கிய ஆலோசனையும் தோற்றது. அரபு மக்கள் மத்தியில் அரபு ஐக்கியத்துக்கான விருப்பம் இருந்த போதும், ஆளும் மேட்டுக்குடிகளிடையில் உருவாகியிருந்த பிளவுகளும் அதிகார வர்க்க நலன்களும் ஏகாதிபத்தியத்துடனான கூட்டணிகளும், அனைத்து அராபியக் கூட்டமைப்புக்கு மட்டுமல்லாது. அரபு மக்களைப் பாதிக்கும் விடயங்களில் அரபு ஒற்றுமைக்கும் தடையாயிருந்தன என்பது இதனால் தெளிவாகிறது. அரபுத் தேசியம் பிளவுகளாற் பலவீனப் பட்டிராவிட்டால், சென்ற நூற்றாண்டில் ஒட்டோமன் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின், ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலத்துக்கு மத்திய கிழக்கில் ஏகாதிபத்திய அதிகாரம் நிலைத்து வந்திருக்க இயலாது. மூலோபாய முக்கியம் வாய்ந்த சில அராபிய அரசுகள் அமெரிக்காவின் வாடிக்கையாளர்களாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் மேலாக, ஏகாதிபத்தியமும் சியோனிசமும், ஒடுக்கப்பட்ட மக்களின் கோபத்திற்கெதிராகத் தமது நிலைப்பிற்கு, அரபு மேட்டுக்குடிகளிடையிலான போட்டியின் அடிப்படையிலான அரபு உலக ஒற்றுமையீனத்திலேயே பெரிதும் தங்கியுள்ளன.

தொடர்ச்சியான குர்தியப் பிரதேசத்தை, முக்கியமாகத், துருக்கிக்கும் ஈராக்கிற்கும் ஈரானுக்கும் இடையே ஏகாதிபத்தியம் பிரித்தது. அதற்கும் மேலாக, ஈராக்கைப் பலவீனப்படுத்துவதற்குச் சுயநிர்ணயத்தைப் பாவித்துக் குர்தியர்கட்குத் தூண்டில் போடுவது அமெரிக்காவுக்குத் தேவையாகும் வரை, ஏகாதிபத்தியம், குர்திய சுயநிர்ணய உரிமையின் கடும் எதிரியாகவும் இருந்து வந்தது. எனினும், இதுவரை, துருக்கியக் குர்தியர்கள் இக் கணக்கிற்குள் வரவில்லை.

தென்னமெரிக்காவின் போர்த்துக்கீயக் கொலனிகள் ஏறத்தாழ ஒன்றாகவே பிரேஸில் என்ற ஒரு நாடாக இருந்து வந்த போதிலும், ஸ்பானியக் கொலனிகள், பெரும்பாலும், ஸ்பானியக் கொலனிய நிருவாக அலகுகளின் அடிப்படையிலான பல நாடுகளாயின. இன்றைய கொலம்பியா, வெனெசுவேலா, ஈக்குவடோர், பனாமா ஆகிய நாடுகளைக் கொண்ட க்றான் கொலம்பியக் குடியரசு (விசால கொலம்பியக் குடியரசு) முற்போக்குச் சிந்தனையாளரும் கொலனிய எதிர்ப்புப் போரில் முக்கிய பங்கு வகித்தவருமான சிமோன் டி பொலிவாரின் முன்முயற்சியால் நிறுவப்பட்டது. அது குறுகியளவு காலமே நிலைத்தாலும், தென்னமெரிக்க ஏகாதிபத்திய விரோத எழுச்சியின் நடுவே, பொலிவாரிய உந்துணர்வு பத்தாண்டுகள் முன்னர் புத்துயிரூட்டப் பெற்றுள்ளது.

பிரித்தானிய, பிரெஞ்சு, டச்சுக் கொலனிய ஆட்சியாளர்கள் தென்னமெரிக்காவில் தமது ஒப்பிடுகையிற் சிறிய பிரதேசங்களைப் பற்றிக்கொண்டிருந்தனர். அதே வேளை, ஸ்பானிய ஆட்சியின் நலிவு, வட அமெரிக்காவிலும் கரிபியன் பிரதேசத்திலும் பிரித்தானியருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் பிரதேசங்களை விட்டுக்கொடுக்கச் செய்தது. அதுவே, பின்னர், பிரித்தானியாவின் கீழான பிரதேசங்களிலிருந்து 1776ல் உருவான (இன்று பொதுவாக அமெரிக்கா என அறியப்படும்) ஐக்கிய அமெரிக்க அரசுகள் மேற்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் விரிவதை இயலுமாக்கிற்று. பிரெஞ்சுக் கொலனி ஆட்சி வட அமெரிக்காவில் தனது பிடியை இழந்து, 1763ல் க்வெபெக்கைப் பிரித்தானியருக்கும் 1803ல் லூயிஸியானாவை ஐக்கிய அமெரிக்க அரசுகட்கும் வரன்முறையாக விட்டுக்கொடுத்தது.

வட, தென் அமெரிக்காக்களில் நூற்றாண்டுகளாக நடைபெற்ற கொலனியக் குறுக்கீட்டால் உருப்பெற்ற தேசிய அடையாளங்கயைப் பற்றிய முக்கியமான விடயம் ஏதெனில், இன்னமும் அவற்றுக்குரிய மொழியும் பண்பாடும் மதமுங் கூட அந்தந்தப் பகுதிகளின் பழங் குடியினரது அடையாளங்களைப் புறந்தள்ளி, ஆக்கிரமிப்புச் சக்திகளின் அடையாளங்களைக் கொண்டனவாகவே கருதப் படுவதாகும். ஆபிரிக்கர்களும் அவர்களிலும் குறைவான எண்ணிக்கையில் இந்தியரும் (பெரும்பாலும் தென்னிந்தியர்) அடிமைகளாகவோ ஒப்பந்தக் கூலியாட்களாகவோ குடியேற்றப் பட்டமையும் இனக் கலப்பும் புதிய இனத்துவ அடையாளங்களைச் சேர்த்தன.

வெகுசன எழுச்சிகளும் இடதுசாரி அரசாங்கங்களும் பழங் குடிகளைத் தேசிய இனங்களாக அல்லது தேசிய சிறுபான்மையினராக அரச அங்கீகாரத்துக்கும் பழங்குடியினரது மொழிகட்குச் சட்டரீதியான அந்தஸ்திற்கும் வழி செய்தன. பெரு 1975ல் க்வெச்சா, அய்மரா மொழிகட்கு அரசகரும மொழித் தகுதி வழங்கியது. வெனெசுவேலா

1999லும் பொலிவியா 2009லும் அனைத்துப் பழங்குடி மொழிகளையும் அரசகரும மொழிகளாக்கின.

பல நாடுகளைக் கொண்ட தென்னமெரிக்காவையோ மத்திய அமெரிக்காவையோ போலன்றி, வட அமெரிக்கா மூன்று நாடுகளை மட்டுமே கொண்டது. அவற்றுள் அமெரிக்கா (ஐக்கிய அமெரிக்க அரசுகள்) 20ம் நூற்றாண்டிலும் தனது எல்லகளை விஸ்தரித்து வந்துள்ளது. அதே அமெரிக்கா இப்போது, ஏலவே பல நாடுகளாகப் பிரிந்துள்ள தென்னமெரிக்காவில் பிரிவினைவாத இயக்கங்களை ஊக்குவிக்கிறது. எனினும், பிரிவினைக்கான ஊக்குவிப்பு இனத்துவ அடிப்படையிலன்றி ஏகாதிபத்திய நலன்களுடன் இணங்கும் வர்க்க நலன்களின் அடிப்படையிலானது.

பழங்குடி மக்கள் முற்றாக ஓரங்கட்டப்பட்டுள்ளனர். அதைவிடப் பிற இனங்களுடன் ஏற்பட்டுள்ள கலப்பையும் கணிப்பலெடுப்போமாயின் எந்தவொரு பழங்குடிச் சமூகமும் ஒரு தேசமாக அமையும் சாத்தியப்பாடு பலவீனமானது. இருப்பினும், கடந்த இரு தசாப்தங்கள் மட்டில், பழங்குடி மக்கள் தமது உரிமைகளை வலியுறுத்தத் தொடங்கி உள்ளனர். பழங்குடி மக்களின் பன்முகப்பட்ட அடையாளங்களின் காரணமான இனத்துவ அடிப்படையிலான பிரிவினை இயலாதது மட்டுமன்றி அம் மக்களின் நலனுக்கு உகந்ததுமல்ல. எனவே வேண்டப் படுவன எவையெனின், நாட்டின் வளங்களில் அவர்கட்கு உரித்தான பங்கும் தத்தமது அடையாளத்தைப் பேணுவதற்கான உரிமையும் ஒவ்வொரு சமூகமும் அததற்கு அதிகம் பொருத்தமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதற்குமான உரிமையுமாம்.

இவ்வாறு வட, தென் அமெரிக்கக் கண்டங்கள் பரவலாகவும் வாழும் பழங்குடி மக்களின் ‘தேசியத்தின்’ அபிலாட்சைகள், உலகின் பிற பகுதிகளில் உள்ள ‘தேசியத்தின்’ அபிலாட்சைகளினின்று வேறுபடுகின்றன. வேண்டின் இந்தியாவில் ஓரங்கட்டப்பட்டுள்ள பழங்குடி மக்களின் ‘தேசிய’ அபிலாட்சைகளுடன் ஒப்பிடலாம். ஏகாதிபத்திய எதிர்ப்பு, இனவாத எதிர்ப்பு என்பன போன்ற பண்புகள் அதற்கும் அடிமை முறை நீக்கப்பட்ட பின்னர் அமெரிக்காவில் விருத்தி பெற்ற “கறுப்பு உணர்வுநிலைக்கும்” பொதுவானவையாக உள்ளன.

தேச அரசுகளின் உருவாக்கம், ஐரோப்பா பரவலும் வாழ்ந்துவந்த ஜிப்ஸிகள் போன்ற நாடோடி மக்களை ஓரங்கட்டவும் அவர்களின் பாரம்பரியப் பிரதேசங்களை மறுக்கவும் வழி செய்தது. அத்துடன் ஐரோப்பாவின் துருவப் பிரதேசத்தின் சமி இனத்தோரின் பிரதேச உரிமையையும் கணிசமாகப் பலவீனப்படுத்தியது. தேச அரசுகளின் உருவாக்கம், குறிப்பாக எழுந்தமான முறையில் எல்லைகள்

வகுக்கப்பட்ட ஆபிரிக்க நாடுகளில், சமூகங்களைப் பிரித்துள்ளதுடன் குலமரபுக் குழுமங்களினதும் இனக் குழுமங்களினதும் வாழ்வாதாரங்களையும் பாதித்துள்ளது.

சுயநிர்ணய உரிமை என்ற கருத்தாக்கம், கொலனிய அல்லது அந்நிய ஆதிக்கத்துக்குட்பட்ட பிரதேசங்களின் மக்கள் திரளினருக்கு மட்டுமே சுயநிர்ணய உரிமையை ஏற்கும் ஐ.நா. சபையாற் கணிசமாக விகாரப்படுத்தப்பட்டுள்ளது. அதனால், அத்தகைய மக்கள் திரள்கட்குட் சிறுபான்மையினராக வாழும் பல குலமரபுக் குழுமங்கட்கும் இனக் குழுமங்கட்கும் அந்த உரிமை மறுக்கப்படுகிறது. இத்தகைய சிறுபான்மையினர் கொலனியப் பாங்கிலான பாரபட்சத்திற்கு உட்படுவதுடன், பெரும்பான்மை ஒன்றின் பேராற் செயற்படும் அரசொன்றின் கீழ், ஒரு பெரும்பான்மைக்குள் ஒன்றுபடுத்தப்படும் அல்லது இல்லாதொழியும் சாத்தியப்பாட்டை எதிர்நோக்குகின்றனர்.

கனிவளங்கட்கான உலகளாவிய தேடல் பழங்குடி மக்களின் இருப்புக்கு ஒரு மிரட்டலாகியுள்ளது. பழங்குடி மக்களைப் பாரபட்சம், இனவாதம், ஓடுக்குமுறை, ஓரங்கட்டல், சுரண்டல் ஆகியவற்றினின்று காக்கும் நோக்கிலான, “பழங்குடி மக்களின் உரிமைகள் பற்றிய ஐ.நா. பிரகடன வரைவை” (UN Draft Declaration on Rights of Indigenous Peoples) ஐ.நா. பொதுச் சபை 2006ம் ஆண்டு ஏற்றுக் கொண்டது. அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசீலாந்து ஆகியன இட்ட கடும் முட்டுக்கட்டைகளிடையே அவ் வரைவை எழுதி உடன்பட, 20 ஆண்டுகள் சென்றன. உடன்பாட்டின் பின்பும் ஏகாதிபத்தியமும் அதன் வாடிக்கைக்கார அரசுகளும் பிரகடனத்தின் நெறிகளை மீறியே செயற்பட்டு வருகின்றன. மேலுந் தகவல்கட்கு: அனுப் ஷா எழுதிய கட்டுரையைப் பார்க்கலாம். (Anup Shah, “Rights of Indigenous People”, *www.globalissues.org/article/693/rights-of-indigenous-people*).

தேசங்களதும் தேசிய இனங்களதும் சுதந்திரத்தை மறுப்பதில் ஏகாதிபத்தியம் மோசமாக நடந்துகொண்டுள்ள போதும், இஸ்ரேலிற் போன்று மக்களை இடம்மாற்றியும் யூகொஸ்லாவியாவிற் போன்று இனக்குழும மோதல்களையும் தேசிய இன மோதல்ளையும் தூண்டி நாடுகளைப் பிரித்தும் புதிய தேசங்களின் உருவாக்கத்துக்கு உதவியுள்ளது. எகாதிபத்தியம் எல்லை வகுத்த நாடுகளான எதியோப்பியாவிலும் சூடானிலும், முறையே, எரித்திரியாவினதும் தென் சூடானினதும் சுயநிர்ணயத்திற்கான வாதங்கள் வலுவானவை. பூகோள அரசியற் காரணங்கட்காக, எதியோப்பியாவில் ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது, ஏகாதிபத்தியம் எரித்திரியா பற்றித் தனது நிலைப்பாட்டைத் தலைகீழாக்கியது. சூடானில், தென் சூடானுக்குச்

சுயாட்சி வழங்கப்பட்டுப் பல காலங் கடந்த பின்பு, தென் சூடானின் பிரிவினையை ஊக்குவித்தது. இன்று சோமாலியாவைப் பிளவுபடுத்த ஏகாதிபத்தியம் எடுத்துவரும் முயற்சிகளும் அவ்வாறானவையே. 1960களின் முற்கூற்றில் கொங்கோவிலிருந்து கட்டாங்காவையும் 1960களின் பிற்கூற்றில் நைஜீரியாவிலிருந்து பியா∴ப்ராவையும் பிரிக்கும் முயற்சிகளினின்று அவை வேறுபட்டவையல்ல.

யுகொஸ்லாவியாவின் உடைப்பும் பின்னர் சேர்பியாவிலிருந்து கொசோவோ மாகாணத்தின் பிரிப்பும் எவ்வாறான தன்னலங் கடந்த சிந்தனைகளாலும் தூண்டப்படவில்லை. மாறாக, அமெரிக்காவுக்கும் சில ஐரோப்பிய ஏகாதிபத்திய அரசுகட்கும், பலவீனமாக எனினும், ஏகாதிபத்திய ஆதிக்கத்தை எதிர்த்த ஒரு அரசிடமிருந்து மேற் குறித்த பிரதேசங்களின் மீதான கட்டுப்பாட்டைப் பறிப்பது தான்.

மூன்றாம் உலகம் பன்முக அடையாளங்களைக் கொண்டது. எனினும் சமூகங்கள் அவற்றுடன் சமாளித்துள்ளன; பாரிய இன மோதல்களின்றி நாடுகள் இருந்துள்ளன. மூன்றாம் உலகின் தேசிய இனப் பிரச்சனையின் சிக்கலுக்குப் பெருமளவிலான காரணம் முன்னர் கொலனித்துவமும் இன்று ஏகாதிபத்தியமுமே. சனத் திரள்களின் சுயநிர்ணய உரிமை பற்றியும் தேச அரசுகளின் உருவாக்கம் பற்றியும் ஏகாதிபத்தியத்தின் ஆர்வம், பூகோள ஆதிக்கம் எனும் ஒரே நோக்கத்தால் இயக்கப்படுவதாகும்.

ஏங்கெங்கு அரசுகள் ஏகாதிபத்தியத்தை மறுத்து நிற்கின்றனவோ அங்கெல்லாம் ஏகாதிபத்தியம் தேசியவாத நோக்கங்களைத் தீவிரமாக ஆதரிக்கும் வாய்ப்பண்டு. பிற இடங்களில், தேசிய இனங்களினதும் பழங்குடிகளினதும் ஒடுக்கலை அது ஆதரிக்கும். ஏல்லாவிடத்தும் ஏகாதிபத்தியம் மக்களைப் பிரித்தே வைத்துள்ளது.

எனவே ஒடுக்கப்பட்ட மக்களுக்கான பாடம் ஏதெனின், தத்தமது தேசியப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு, ஏகாதிபத்தியத்தினதும் மேலாதிக்கவாதிகளதும் குறுக்கீடற்ற முறையில் அவற்றைத் தீர்க்கும் வழிகளைக் கண்டறிய வேண்டும் என்பது தான்.

*****

www.tamilarangam.net

# அது நிற்காது

*-- கத்தார் --*

1

அது நிற்காது, அது நிற்காது, அது நிற்காது
இப் பசி எனும் போர் நிற்காது
அது நிற்காது
கொள்ளையர் ஆட்சி முடியுந்தனை
இந்த ஆயுதப் போராட்டம் நிற்காது
அது நிற்காது
உழுதடம் தோண்டிய ஏர் உரைக்கும்
இந்த உழுதடம் எனது என்று
கன்றுகள் நாட்டிய கைகள் சொல்லும்
இந்தக் கன்றுகள் எமது என்று
கதிர் அறுத்த அரிவாள் உரைக்கும்
இந்த அறுவடை எனது என்று
அது நிற்காது
கொல்லனின் தீ நெடுங் கொழுந்துவிடும்
குயவனின் சூளை அழன்றெரியும்
*மாதிகா* கஞ்சிரா தனதனதன என
செய்தியினை அது முரசறையும்
அது நிற்காது

*(தொடர்ச்சி மறுபக்கம்)*

www.tamilarangam.net

2

வீழ்ந்து வணங்கிய பேர்களெல்லாம்
தங்கள் வாள்களைத் தீட்டுகிறார்
தாம் அடிமைகள் என்றிட்ட பேர்களெல்லாம்
தங்கள் அலவாங்கு தீட்டுகிறார்
குறுக்கிடும் கள்ளரும் கொள்ளையரும்
கொன்று குவிபடுவார்
ஏ! அண்ணே
அது நிற்காது
எறும்புகளின் கூட்டம் அசைகிறது
பாம்பின் நெஞ்சம் நடுங்குகுது
செம்மறி ஆடுகள் பாய்கின்றன
ஓநாய் ஓடி மறைகிறது
பசுக்களின் மந்தை அசைகிறது
புலி ஓட்டம் பிடிக்கிறது
அது நிற்காது

*கத்தார் ஆந்திராவின் புகழ் பெற்ற சமகாலப் போராளிக் கவிஞரும் பாடகருமாவார்.*

*மாதிகா: தமிழகத்தின் அண்டை மாநிலங்களில் வாழும், அருந்ததியரை ஒத்த சமூகத்தினர்.*

# இஸ்லாம் ஆபத்தில் இல்லை

## ஹபிப் ஜலிப்
(1928-1993)

*ஆபத்தில் உள்ளோர் காசு நிறைந்த சேம்பேறிச் செல்வந்தர்கள்*
*நொருங்குகிற சுவர்கள்*
*நூற்றாண்டுகளின் குப்பைகளை உடைக்கப் போகின்றன*
*இஸ்லாம் ஆபத்தில் இல்லை*
*மண்ணின் உரிமைகள் யாவையும் சில குடும்பங்கள் கொண்டிருக்க*
*நபி பெருமானைத் தொழுவோர் மகிழ்வற்றிருப்பதேன்?*

*ஆபத்தில் உள்ளோர் வேட்டை விலங்குகள்*
*வீதிகளில் ஆடம்பரமாய் ஓடும் பலவண்ணக் கார்கள்*
*அமெரிக்க உள்ளங்கள் அவர்கட்காக ஆடும்*
*இஸ்லாம் ஆபத்தில் இல்லை*
*எங்கள் சுலோகங்களால் மாளிகைகள் குலுங்கி நடுங்கும்*
*ஓங்கும் அலங்கரித்த கடைகட்கு நமது நம்பிக்கைகள் பணியா*

*ஆபத்தில் உள்ளோர் நெடுஞ்சாலைக் கொள்ளையர்கள்*
*வாய்ததைச் சுருட்டும் மேற்கின் வணிகர்கள்*
*வழிப்பறி செய்யும் கள்ளரும் தந்திரக்காரரும்*
*இஸ்லாம் ஆபத்தில் இல்லை*
*அமைதிப் பதாகையை உயர்த்திப் பிடித்து*
*மானிடம் அனைத்தையும் நேசித்து நாம் முன்னே செல்கிறோம்*
*ஏ ஜலிப், முழு உலகையும் நேசித்தல் நமது பெருமிதமான கொள்கை*

*ஆபத்தில் உள்ளோர் மாளிகையின் கொன்றுண்ணி விலங்குகள்*
*மன்னர்களும் அவர்களது உடந்தையாளர்களும்*
*நவாபுக்களும் அவர் போன்ற துரோகிகளும்*
*இஸ்லாம் ஆபத்தில் இல்லை*

***ஹபிப் ஜலிப் (Habib Jalib) பாக்கிஸ்தானின் புகழ் பெற்ற, எதேச்சாதிகார-விரோத, இடதுசாரிக் கவிஞரராவார்***

# மக்களைக் காப்பதற்கல்ல

*வரவர ராவ்*

தெலுங்கிலும் ஆங்கிலத்திலும்
பொலிஸ் என்றால் காவலர்கள் என்றே வாசிக்கிறேன்
“குழப்படி செய்தால்
(குழப்படி என்றால் மூத்தோரை மறுத்துக் கிளர்வது)
பொலிஸ் பிடித்துக்கொண்டு போகும்
கவனமாயிரு, பொலிஸ் என்பது ராட்சதன்”
என்று என் பிள்ளைப் பருவத்தில் அம்மா சொன்னார்.
அவரது சொற்கள் உண்மையாகின.
பொலிஸின் கைகளில் உள்ள துவக்குக்கள்
மக்களைக் காப்பதற்கல்ல
அவர்களைப் பிடித்துச் சுட்டுத்தள்ள.
குருடர்களிக் வெள்ளைக் கைப்பிரம்பு
பொலிஸ் அவர்களைப் பொல்லால் அடிக்க ஊக்குவிக்கும்
அவர்கட்கு வழிகாட்டுவதற்கல்ல.
இப்போது இந்த அரசாங்கம்
குருடர்களுக்கு அமிலமும் ஊசிகளும் வழங்குகிறது
என உணருகிறேன்.

*1940இல் பிறந்த பெண்டியாலா வரவர ராவ் நக்ஸல்பாரி இனத்ததின் தீவிர ஆதரவாளரான ஒரு கம்யூனிஸட் ஆவார்.*

*இக் கவிதை N. வேணுகோபாலால் ஆங்கிலத்துக்குப் பெயர்க்கப்பட்டது. தமிழில்: சி. சிவசேகரம்*

*புதிய-ஜனநாயக மாக்சிய-லெனினிசக் கட்சிக்கு நிதி உதவ விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு வழங்கி உதவலாம்.*

***K. Senthivel* அல்லது *V. Mahendran, Account Number 1570018335 Commercial Bank, Grandpass Branch, Colombo 14, Sri Lanka***